"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி - 2024



"குரோதி வருடம் குதூகலமாக அமையட்டும்"

"காலனைக் காய்ந்தபிரான் கடவூருறை உத்தமனே!"
- அப்பர் -

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

OUR SERVICES:

- **Accounting & Business Services**
- **Tax Consultancy**
- **Tax Investigation**
- **Locums & Umbrella Payroll**
- **Property Consultancy**
- **Mortgages**
- **Pension & Investment**
- **Insurance**
- **Will & Probate Services**

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE
2005 · 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative Selected by Parliamentary Review

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

மணி 32

# கலசம்
# KALASAM

ஒலி 110

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

கலசம்
நிருவாகக் குழு

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம்**
**நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச்
சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# சந்தேகங்கள் தீர்ப்பீர்களா?

அண்மையில் ஒருவர் கோயிலிலே தேவாரத்தைப் பிழையாகப் பாடினார். பிழையைச் சுட்டிக்காட்டி, சரியான தொடர் எது என்று சொன்னபோது, அவரின் பதிலைக் கேட்டுத் துணுக்குற்றேன். “நான் நீங்கள் சொன்னதுபோலத்தான் பாடிவந்தேன். ஆனால் அது பிழையென்று ஒரு சிறந்த பேச்சாளர் சொன்னார். அவர் சொன்ன திருத்தத்தின்படிதான் இன்று பாடினேன்” என்றார். பேச்சாளரின் பெயரைச் சொல்ல மறுத்துவிட்டார்.

ஈழத்தில் நடந்த போராட்டத்தால் ஒரு தலைமுறை சமயசம்பந்தமான விடயங்களைக் கற்க, கேட்கத் தவறிவிட்டது. கோயிலில் எப்படி வழிபடவேண்டும், தேவாரம் என்றால் என்ன, சிறுதெய்வவழிபாடு செய்யலாமா எனப்பல சந்தேகங்கள் நமக்கு உண்டு. இவற்றுக்கெல்லாம் பதில் தருவதற்கு யாரை அணுகலாம், யாரிடம் கேட்கலாம் என்பதும் புரியவில்லை. இதுதான் பல தமிழர்களின் இன்றைய பிரசினை.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்துக் கோயில்களில் சமயச் சொற்பொழிவுகள் நடக்கும். மணி ஐயர், விநாசித்தம்பி, தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற ஈழத்துப் பேச்சாளர்களும் தமிழ்நாட்டிலிருந்து கிருபாநந்தவாரியார், புலவர் கீரன் போன்றோரும் கோயில்களில் பேசினார்கள். அதனால் மக்கள் பயனடைந்தார்கள்.

இப்போது பேச்சுக்கென்று வருபவர்கள் பலர் மலிவான நகைச்சுவைத் துணுக்குச் சில சொல்லித் தமது பேச்சை முடித்துவிடுகிறார்கள். இதுதான் இன்றைய நிலை. மக்களின் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்வதில்லை. ஒன்றில் அவர்களுக்குப் பதில் தெரியாது; அல்லது கேட்டவரின் மனதைப் புண்படுத்தினால் அடுத்தமுறை பேச்சுக்கு அழைக்கமாட்டார்களோ என்ற பயம்.

முதல்வகுப்பு விமானச் சீட்டு, ஐந்து நட்சத்திர விடுதி என்று பல்லாயிரம் செலவுசெய்து பேச்சாளர்களை அழைக்கவேண்டிய அவசியம் இல்லை. சிறு தொகைக்கே வந்து சரியான விளக்கங்களைப் பேசக்கூடிய பலர் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் இருக்கிறார்கள். இங்குள்ள ஆலயங்களில் பிரசாதம் என்ற பெயரில் பலநூறு செலவுசெய்து இட்லி, இடியப்பம் கொடுக்கும் அதே வேளை அறிவுப்பசியையும் போக்க அறங்காவலர் ஆவன செய்தால் நன்றாக இருக்கும். எமது சமய சந்தேகங்களும் தீரும், தீர்ப்பீர்களா?

**க ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**

# இந்த இதழில்

இந்து சமய....... மரபு மீறல்களும் 03

திருக்கடவூர் 06

செல்வத்தின் கீர்த்தி கந்தபுராணச் சிந்தனைகள் 07

Saiva School of Hinduism 09

சுவாமி மலை பயணக்கட்டுரை 12

திருக்குறிப்புத் தொண்டர் 16

சுழற்சி 20

இராசன் வாத்தியார் 27

தொண்டு 32

திருக்குறள் கதைகள் 34

விநாயகர் திருவுருவ தத்துவம் 38

Kumbelawela Pillaiyar Temple 42

**அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்**

**கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**



# இந்து சமய வழிபாடும் கிரியைகளில் மரபு மீறல்களும்

நமது இந்து - தமிழ்ப் பண்பாட்டில் நிலவி வரும் மரபுகள் - அவற்றில் இன்று ஏற்பட்டு வரும் மீறல்கள் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது இக் கட்டுரையின் நோக்கம். அதீத ஆர்வம் என்பது இப்போது ஆபத்தை விளைவிக்கும் ஒன்றாக மாறிவருகிறது. அதனால்தான் மரபுமீறல்கள் பல தோன்று கின்றன. கால - தேச - வர்த்தமானங்களுக்கு இணங்கவும் மக்களின் ஆர்வத்தை வளர்ப்பதற்கு ஏற்பவும் நாம் பல மாறுதல் களைச் செய்யவேண்டியவர்கள் ஆகின்றோம்; அவ்வாறு செய்தும் வருகின்றோம். ஆனால் மரபு இதனால் உடைந்துவிடக்கூடாது. அத்திவாரம் அப்படியே இருக்க, அதில் புதிய அமைப்பில் கட்டடங்கள் கட்டவேண்டும். பழமையில் புதுமை காணவேண்டும். புதுமைகள் நமது மரபில் இடையூறு செய்ய முற்படும்போது, ஆன்றோர்கள் வழியில் வரும் சான்றோர்கள் தட்டிக் கேட்கவேண்டும்; வழிகாட்டவேண்டும்.

சிவாசாரியர்கள், ஆன்மிக சொற்பொழி வாளர்கள், ஆலய பரிபாலகர்கள் எனப் பலரும் ஏன் வாளாவிருக்கிறார்கள்? ஓடுகின்ற வெள்ளத்தோடு நாமும் ஓடுவோம், நமக்கேன் வீண் வம்பு என எண்ணுகிறார்களோ? பாஞ்சாலியின் துகிலை உரிந்த துச்சாதனனும் அதனைக் கட்டளையிட்ட துரியோதனனும் வீரசுவர்க்கம் செல்ல, அதனைப் பார்த்துக் கொண்டிருந்த பீஷ்மர்தான் அம்புப் படுக்கையில் படுத்திருக்க நேர்ந்தது. தவறு நடக்கும்போது வாளாவிருப்பது கடும் பாவம்.

ஒரு முக்கிய விடயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நம் நாட்டில் பல நிகழ்வுகளில் இத்தகைய முரண்பாடுகள் உருவாகும்போது, "எல்லாம் இந்த வெளிநாட்டுக் காரராலைதான்" என்ற குற்றச்சாட்டுக் கிளம்புவதைப் பலரும் கவனித்திருக்கலாம். அதைத் தொடர்ந்து, "எல்லாம் வியாபாரமாய்ப் போச்சுது" என்பதும் தொடர்கிறது.

உண்மையில், பல தடவைகள் பல வெளிநாடுகளுக்குச் சென்று பல ஆலயங்களில் பணியாற்றிய அநுபவத்தை வைத்து இக் கட்டுரை ஆசிரியர் கூறக்கூடிய ஒரு முக்கிய செய்தி இதுதான். இந்தக் குற்றச்சாட்டை மறுக்க முடியாமல் உள்ளது எனினும், இப்போது நம் நாட்டைவிட வெளிநாட்டு ஆலயங்களில்தான் மிகச் சிறப்பாகவும் விரிவாகவும் பூசை வழிபாடுகள், கிரியைகள், அவற்றோடு இணைந்த நமது பண்பாட்டு அம்சங்களான திருமுறை ஓதல், இசை - நடன சமர்ப்பணங்கள், கலாசார விழுமியங்கள் பேணப்படுகின்றன என்பதையும் இதனோடு சொல்லவேண்டிய தேவை இருக்கிறது.

எனவே இந்தச் சிறப்பினால் அந்தக் குற்றச்சாட்டு மறைந்துவிடும் என்பதன்று. இத்தகைய சிறப்பு மிக்கவர்கள் முன்னைய குற்றச்சாட்டினைப் பரிசீலித்து சற்று நிதானமாகச் சிந்தித்து அறிவுபூர்வமாக ஆராய்ந்து, கூடியவரை மரபுமீறல்களைக் கட்டுப்படுத்தி, சீர்திருத்தங்களை ஏற்படுத்த வேண்டிய கடப்பாட்டில் உள்ளனர் என்பதே இங்கு வைக்கப்படும் கருத்தாகும். அத்தோடு, தமது நாட்டிலுள்ள, தம்மோடு தொடர்புள்ள - தமது பொருளாதார வளங்களை வேண்டிப் பயன்படுத்துகின்ற ஆலயங்களில் தமது அழுத்தங்களைப் பிரயோகித்து, "நம்மைப்போல் நீங்களும் திருந்திக்கொள்ளுங்கள்" என்று வலியுறுத்த வேண்டும்.

ஒரு விடயத்தில் தெளிவு ஏற்படவேண்டும். அதாவது, கால - தேச - வர்த்த மானங்களுக்கு இணங்க, அதாவது இடம், பொருள், ஏவல்

என்ற அடிப்படையில் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு அவசியமான சில மாறுதல்கள் தவர்க்கமுடியாதவை. அவற்றை இக் கட்டுரை கண்டிக்க முற்படவில்லை. அடிப்படை உண்மைகளைத் தெரிந்து கொள்ளாமல், அறிந்துகொள்ள விரும்பாமல், பக்தி உணர்வோடு சிந்திக்காமல் ஒருவரைப் பின்பற்றி மற்றவர்களும் செய்துவருகின்ற ஆடம்பரமான - களியாட்டுத்தனமான செயற்பாடுகளே முக்கியமாக இங்கு கண்டிக்கப்படுகின்றன.

1. சித்திரைப் புத்தாண்டு பிறந்த உடனேயே அடுத்ததாகச் சித்திராபௌர்ணமி வருகிறது. அத்தினத்தில் தாயாரை நோக்கித் தர்ப்பணம் செய்தல் என்ற புதிய வழக்கம் சாஸ்திர விரோதமாக இன்று பல இடங்களிற் கடைப்பிடிக்கப்படுகிறது. இதற்கு ஆதாரம் இருந்தால் யாராவது எடுத்துக் கூறலாம். தந்தையை நோக்கி அமாவாசை விரதமும் தாயாரை நோக்கிப் பௌர்ணமி விரதமும் இருத்தல் நீண்டநாளாக உள்ள வழக்கம். சூரியன் பிதுர்க்காரகன், சந்திரன் மாத்ருகாரகன் என்ற சோதிட அடிப்படையில் அமைந்த விளக்கம் தவிர இதற்கு வேறு ஆதாரமில்லை.

பிதுர் வழிபாடு யாவும் அமாவாசைக்குரியதே. தர்ப்பணத்துக்கு உரிய நாள் அமாவாசை மட்டுமே. ஒவ்வொரு அமாவாசை நாளிலும் தந்தை - தாய், தந்தையின் தந்தை, தாய், அவரின் தந்தை தாய் என மூன்று தலை முறையில் உள்ள ஆறுபேரும், தாயினுடைய தந்தை தாய், அவர்களுடைய தந்தை தாய், அவர்களுடைய தந்தை தாய் என ஆறுபேரும் ஆகப் பன்னிரண்டு முன்னோர்களை நினைவுகூர்ந்து தர்ப்பணம் செய்வதற்கு சாஸ்திரங்கள் இடமளிக்கின்றன. குறைந்தபட்சம் தந்தை, தாய் இருவரை மட்டுமாவது அமாவாசை நாளில், (சிறப்பாக ஆடி அமாவாசை) நினைந்து அவர்களுக்குத் தர்ப்பணம் செய்வது முக்கியம். இங்கு முக்கியமான ஒரு விதிமுறை கவனிக்க வேண்டும். ஒருவர் தனது தந்தைக்கு ஈமக்கடன் செய்தபிறகே தர்ப்பணத்துக்கு அதிகாரி ஆகிறார். அதாவது தந்தை உயிரோடு இருக்கும்போது தாய்க்குத் திவசம் செய்யலாமேயன்றித் தர்ப்பணம் செய்ய முடியாது.

இன்று நம்மவர்கள் இரு தவறுகளைச் செய்கி றார்கள். அமாவாசையில் தந்தைக்கு மட்டும் அல்லது தந்தை வழியினருக்கு மட்டும் தர்ப்பணம் செய்துவிட்டு தாயை மறந்துவிடும் தவறு ஒன்று. தேவையற்ற பௌர்ணமி நாளில் தாய்வழிக்குத் தர்ப்பணம் செய்கின்ற இரண்டாவது தவறு. இதற்குப் பரிகாரமாக ஒரு வேண்டுகோள் முன்வைக்கலாம். ஆடி அமாவாசைபோல, சித்திரா பௌர்ணமியிலும் ஒரு பெரிய வரும்படியைத் தேடிக்கொள்ளலாம் எனக் கருதி இப்படியொரு கைங்கரியத்தை ஆரம்பித்தவர்கள் இந்தத் தவறை நிறுத்தி ஒவ்வொரு அமாவாசையிலும் அப்பா அம்மா இருவருக்கும் தர்ப்பணம் செய்யவேண்டும் என்பதை (உண்மையான சாஸ்திர நியதியை) வலியுறுத்தி அதனை நடைமுறைப்படுத்தி ஒவ்வொரு அமாவாசையிலும் வருமானத்தைத் தேடிக்கொள்ளலாம்

**2. ஆலயத்தில் இருக்கும் திருவுருவங்கள் அருட்பேறு மிக்க புனிதத் திருவுருவங்கள் என்ற எண்ணம் சிறிதுமில்லாமல், ஏதோ விளையாட்டுப் பொருள்கள் என எண்ணிக் கொண்டு அடியார்கள் போடுகிற ஆட்டம் சகிக்க முடியவில்லை. தேர்த்திருவிழா நாள்களில் சுவாமியை ஆட்டும் வேகத்தைப் பார்த்தால் மனம் பதறுகிறது. அது போதா தென்று வாளி வாளியாகத் தண்ணீர் கொண்டுவந்து வைத்துக்கொண்டு சுவாமிக்கும், சுவாமி காவுகிறவர்களுக்கும் மூச்சு முட்டும் வகையில் விசிறியடிக்கிறார்கள். இது எதற்காக?**

**இப்படிச் சுவாமியை அபவாதம் செய்யும் அடியவர்களைப் பீடத்தில் ஏற்றி, இதேபோலத் தண்ணீரும் அடித்து ஆட்டி உலுப்பிக் காட்டினால் மட்டுந்தான் அவர்களுக்கு அதன் கொடுமை புரியும். தேர் வைபவத்துக்குப் போகும்போது முன்பின்னாகவும் திரும்பி வரும்போது பக்கவாட்டிலும் சுவாமியை**

**மெல்ல ஆடச்செய்து இனிமையாகக் கொண்டுவருவது மரபு. அதை அளவுக்கு மிஞ்சிய வேகத்தில் சிரிப்பும் விளையாட்டுமாகச் செய்வது எவ்வளவு தப்பு? பன்னீர் தெளித்து சுவாமியைக் குளிர்விப்பது மரபு. அதற்காக வாளி வாளியாகவா தண்ணீரை அள்ளி இறைப்பார்கள்?**

இவ்வுலகில் வாழும்போது நாம் இப்படி வாழவேண்டும், ஆலயத்தில் நாம் இப்படி இப்படி நடக்கவேண்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் நாம் அவற்றை மிக இலகுவாக மீறுகிறோம். நீதிமன்றத்துக்கு இப்டித்தான் செல்லவேண்டும் எனச் சட்டதிட்டங்கள் உண்டு. ஒரு நோய்க்கு வைத்தியர் தரும் மருந்துகளை இன்ன இன்ன முறையில்தான் பயன்படுத்தவேண்டும் என்ற விதிமுறைகள் உண்டு. அவற்றை நாம் கடைப்பிடிக்கிறோம். ஆனால் ஆலயத்தில் நாம் விதிமுறைகளை மீறுகிறோமே! ஒரு வைத்தியருக்கு அல்லது ஒரு நீதிபதிக்கு உள்ள சக்திகூடக் கடவுளுக்கு இருப்பதாக நாம் நம்பவில்லலை என்பதுதான் இதற்குக் காரணம். அப்படியான ஒரு சாதாரண சக்தியிடம் அதைக் கொடு, இதைக் கொடு என ஏன் பிச்சை கேட்கவேண்டும்? அதை அவர் தருவார், அதற்கான வலிமை அவரிடம் உண்டு என நம்பினால் அவரை மதித்து சாஸ்திரங்கள் சொல்பவற்றை ஏற்று முறைப்படி வாழவேண்டும் அல்லவா?

3. சோதிட அடிப்படையில் நல்ல நேரம் பார்த்து நற்காரியங்கள் செய்வது நமது மரபு. ஆனால், நமது வசதி கருதி, பஞ்சாங்கத்தில் இல்லாத - நமக்கு வசதியான நாள்களில் நல்ல காரியங்களைச் செய்கிறோம். தாலி கட்டுதல் முதலிய மிக முக்கிய காரியங்களில் இந்த நேரத்தை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதில் நாம் அதிக கவனம் செலுத்துவதில்லை. ஏனைய ஆடம்பர செயற்பாடுகளினால் முகூர்த்த நேரத்தைத் தவறவிடும் சுபகாரியங்கள் மிகப்பல.

4. விரதங்களுக்கு விதிமுறைகள் உண்டு. எல்லா விரதங்களும் எல்லா நற்பலன்களையும் கொடுக்க வல்லவையே! ஆயினும் சில விரதங்களுக்குச் சில முக்கியமான பலன்கள் உண்டு. நமது தேவை எதுவென உணர்ந்து அதற்கான விரதம் எதுவென அறிந்து அந்த விரதத்தை மட்டும் முறையாக அநுஷ்டிப்பது நன்று. மனம் போனபடியெல்லாம் எல்லா விரதங்களையும் ஆரம்பித்துவிட்டு முறையாகக் கைக்கொள்ளாமல் இடர்ப்படக்கூடாது.

தடைகளைப் போக்கி வெற்றிகளைத் தருவது விநாயக விரதங்கள். கல்விப் பேற்றுக்குச் சரஸ்வதி (நவராத்திரி) விரதம். ஆரோக்கியம், இறைபக்தி, சுகவாழ்வு எனப் பொது நலங்களைத் தரவல்லது வெள்ளிக்கிழமை விரதம். திருமணப் பேற்றுக்கும் நல்ல குடும்ப வாழ்வுக்கும் கேதாரகௌரி விரதம். மகப்பேற்றுக்குக் கந்தசஷ்டி விரதம். அனைத்து நலன்களையும் அருளி, சிவபதத்தை நல்குவது பிரதோஷ விரதம், சிவராத்திரி விரதம் முதலியன.

இப்படி இன்னும் பல மரபு மீறல்கள் வரம்பு மீறி வளர்ந்துகொண்டு இருக்கின்றன. சம்பந்தப்பட்டவர்கள் நல்லறிஞர்களை அணுகி, ஆராய்ந்து தள்ளவேண்டியவற்றைத் தள்ளி, கொள்ளவேண்டியவற்றைக் கொண்டு நமது பாரம்பரிய நடைமுறைகளைச் சாஸ்திர விரோதம் இன்றி நடைமுறைப்படுத்தி அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்க வேண்டியது நமது கடமையாகும்.

**கலாபூஷணம் பிரம்மஸ்ரீ ப சிவானந்த சர்மா, (கோப்பாய் சிவம்)**
**வருகைதரு விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடம்**
நன்றி: இந்துசமய வழிபாடு மற்றும் கிரியைகளில் மரபு மீறல்கள்,
சைவ மாநாடு மலர், பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம் 2023

# திருக்கடவூர்



(அட்டைப்படம்)

“..........மாடமோங்குங் **கடவூர்** தனுள்.....” - திருஞானசம்பந்தர் 3-8-1
“...உருட்டிய சேவடியான் **கடவூ**ருறை உத்தமனே” - அப்பர் 4-107-1
“..... கடியார் கொன்றையனே **கடவூர்**தனுள் வீரட்டத்து....” - சுந்தரர் 7-28-1

தேவார முதலிகள் மூவரும் ஒருமனதாகத் “திருக்கடவூர்” என்று குறிப்பிட்ட இந்தத் தலத்தைத் தற்போது சிலர் “திருக்கடையூர்” என்று சொல்லும் வழக்கம் எப்படி வந்ததென்று தெரியவில்லை. “கடையவனேனை” என்று திருவாசகத்தில் மணிவாசகர் தன்னைக் கீழானவன் என்று குறிப்பதற்கே கடையவன் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். சிந்திக்கவேண்டிய விடயம் இது.

கோயிலின் மூலவர் அமிர்தகடேசர், அம்பிகை அபிராமி. தேவர்கள் அமுதத்தைக் கொண்டுவந்து ஒரு தூய்மையான இடத்தில் வைத்து உண்ணவேண்டும் என்று இங்கு கொண்டுவந்ததாகவும் இங்கே வைத்தவுடன் அது இலிங்க வடிவானதென்றும் ஒரு வரலாற்றுக்கதை உண்டு.

இங்குள்ள பிள்ளையார் - கள்ளவாரணப் பிள்ளையார். மரம் - வில்வமரமும் சாதிமுல்லைக் கொடியும். தீர்த்தம் - அமிர்தபுட்கரணி, காலதீர்த்தம்.

காவிரித் தென்பாலுள்ள திருத்தலங்களுள் இது 47ஆவது திருத்தலம் ஆகும்.

அட்டவீரட்டம் என்று சொல்லப்படும் எட்டுத் தலங்களுள் இது அடங்கும். மார்க்கண்டேயருக்காய்,

“ஆலமே அமுதமாக உண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டர்காக் காய்ந்த....” தலம்.

ஏனைய தலங்கள், திருக்கண்டியூர் (பிரமன் சிரம் அரிந்தது), திருக்கோவலூர் (அந்தகாசுரனைக் கொன்றது), திருவதிகை (முப்புரம் எரித்தது), திருப்பறியலூர் (தக்கன் தலை கொய்தது), திருவிற்குடி (சலந்தராசுரனைச் சங்கரித்தது), வழுவூர் (யானையை உரித்தது), திருக்குறுக்கை (காமனை எரித்தது) ஆகும். பின்வரும் பாடலால் இதை அறியலாம்:

பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம் அதிகை
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மாமழுவூர்,
காமன் குறுக்கை யமன்கடவூர் இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களுஞ் சூடிதன் சேவகமே

திருஞானசம்பந்தர் ஒரு பதிகமும் திருநாவுக்கரசர் இரு பதிகங்களும் சுந்தரர் ஒரு பதிகமும் இத்தலத்தின்மீது அருளியிருக்கிறார்கள்.

மயிலாடுதுறை - தரங்கம்பாடி தொடர்வண்டிப் பாதையில் திருக்கடவூர் நிலையத்துக்குக் கிழக்கே 1 கிமீ தூரத்தில் இத்தலம் அமைந்துள்ளது.

**தகவல்: ஞாலக்கோன்**
**நன்றி: திருமுறை மின்னம்பலம்**

# செல்வத்தின் கீர்த்தி

## கந்தபுராணச் சிந்தனைகள்

Dr ச சிவலோகநாதன்

“பொருளிலார்க்கு இவ்வுலக மில்லை” என்று வள்ளுவர்பெருமான் சொல்கிறார். ஆனால் எம்முடைய சைவத்தமிழ்க் கலாசாரத்தில் செல்வத்தை நாம் பெரும் பேறாகக் கருதுவதில்லை. செல்வம், கல்வி இரண்டையும் ஒப்பிட்டுச் செல்வத்திலும் பார்க்கக் கல்வி சிறந்ததென்று தீர்மானம் செய்வது நமது கலாசாரம். “மன்னனுக்குத் தன் தேசம் அல்லாற் சிறப்பில்லை, கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு” என்று ஔவையார் சொல்லியிருக்கிறார் என்று சொல்லி யாராவது செல்வதைப்பற்றிப் பேசவந்தால்கூட அலட்சியம் செய்துவிடுகிறோம். ஆனால், ஏனோ “கொடிது, கொடிது வறுமை கொடிது” என்று ஔவை சொன்ன வாக்கியத்தைத் தாரக மந்திரமாக வைத்துச் செல்வம் தேடுவதில் நாம் அதிக அக்கறை செலுத்துவதில்லை. சம காலத்திலே கல்வி, வறுமையைப் போக்குவதற்குரிய ஒரு சிறந்த கருவியாகும். உண்மையில் கல்வி, செல்வம் இரண்டையும் நாம் பிரிக்கக்கூடாது. சேர்த்து ஒன்றாகக் கொண்டுசெல்வதின் மூலந்தான் எம்மவர்க்குரிய எதிர்காலத்தை உறுதி செய்யமுடியும். அறவழி நின்று பெரும்பொருள் தேடி அதன்பிறகு இன்பத்தை அநுபவிக்கும் கலாசாரத்தை நிலைநிறுத்த முடியும். செல்வத்தின் கீர்த்தி கந்தபுராணத்திலே மாயை தன் புத்திரர்களுக்கு உபதேசம் சொல்வதாகச் சொல்லப்படுகிறது.

பெருமையுடைய உள்ளத்தில் குற்றமில்லாத அறிவு தோன்றப்பெற்ற உயிர்களுக்கெல்லாம், பிறப்பதால் உண்டாகும் பயன் என்னவென்றால், நூற் கல்வியாலும் செல்வ வளத்தினாலும் மேன்மை அடைவதே! செல்வம், கல்வி என்ற இரண்டினுள் ஒன்றைப் பெற்றுக்கொள்ளாது போனால், அரிய அந்த உயிரைவிடப் பேயின் பிறப்பு மிகவும் சிறப்புடையதாகும்.

திருமைகொள் வளனொடு தீதில் கல்வியாம்
இருமையின் ஒன்றினை எய்தி டாதெனின்
அருமைகொள் அவ்வுயிர் அதனின் ஆற்றவும்
பெருமைய துடையது பேயின் தோற்றமே.

மாயை உபதேசப் படலம் 7

இவ்வாறாகப் பிறவி எடுத்த உயிர்களுக்கெல்லாம் ஆதாரமாக இருக்கின்ற கல்வி, செல்வம் என்கின்ற இரண்டையும் ஆராய்ந்தால் அரிய கல்வியைவிடச் சிறந்தது செல்வமே என்று சொல்லுதலே தக்கதாகும். ஏனெனில் “புகழப்படுகின்ற நூல்களை எல்லாம் இடைவிடாமல் பல நாள்கள் கற்றவராயினும், மிக்க வறுமையால் செல்வம் அற்றவரானால், செல்வத்தைப் பெறவேண்டிப் பகைவரையும் வணங்கி நிற்பர்.”

சொற்றகு கலையெலாந் தொடர்ந்து பற்பகல்
கற்றவ ராயினுங் கழி நிரப்பினால்
அற்றவ ராவரே ஆக்கம் வேண்டியே
பற்றவர் தம்மையும் பணிந்து நிற்பரால்

மாயை உபதேசப் படலம் 9

அளவற்ற கல்வியையும், எல்லா வளங்களையும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற இயல்புடையது செல்வம். அன்றியும் குறைவில்லாதபடி அவற்றை விருத்தி செய்வதும், மேன்மையுடைய அழகு செய்வதும் அழிவில்லாத செல்வமேயாகும். நூல்களில் பொருந்திய கல்வியை நுட்பமாக ஆராய்ந்து அறிந்து தூய அறிவையுடைய சிறப்புடையவரும், மேன்மையுடைய செல்வத்துடன் பொருந்தாராயின் மண்ணுலகம் அவரைக் குற்றமுடையவராகவே கருதும். அளவிட முடியாத கல்வி மட்டுமே அல்லாது மேன்மையும், என்றுமே நினைக்கப்படும் தருமமும், சிறந்த புகழும், அடையற்பாலதாகிய வெற்றியும் ஏனைய பிறவும் செல்வத்தாலேயே சேர்க்கப்படுவதால் அச் செல்வத்தைவிடச் சிறந்தது வேறொன்றும் இல்லை.

அளப்பரும் விஞ்சையே அன்றி மேன்மையும்
உளப்படு தருமமும் உயர்ந்த சீர்த்தியும்
கொளப்படு கொற்றமும் பிறவுங் கூட்டலால்
வளத்தினிற் சிறந்தது மற்றொன் றில்லையே

*மாயை உபதேசப் படலம் 12*

இந்த உலகத்தில் ஒருவர் செல்வத்தை அடையவேண்டின் அவர் முயற்சியுடையவராக இருத்தல் வேண்டும். இவ்வாறாக மாயையின் வாயினூடாகச் செல்வத்தைப்பற்றிக் கந்தபுராணம் சொல்கிறது.

“உண்டு களித்தவனிடம் போ ஒருபிடி தீனுக்கு, உடுத்துக் களித்தவனிடம் போ உடு புடைவைக்கு” என்று ஒரு நாட்டுப்புறத்துப் பழமொழி உண்டு. மாயை தாழ்நிலையிலிருந்த அசுர குலத்தைச் செல்வத்தினாலும், அதன் கீர்த்தியினாலும் மிகவும் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்தவள். “மக்காள்! தவத்தைச் செய்து சிவத்தை அடையுங்கள்” என்று சொன்ன காசிபருக்கு எதிராக, “மக்காள்! செல்வத்தைச் சேர்த்துக் கீர்த்தி பெறுங்கள்” என்று சொல்லிச் செயலிற் காட்டியவள். எனவே இவ்வுலக வாழ்விலே நிற்கின்ற எமக்கு மாயையின் பாடமும் பொருத்தமானதே. உண்மையில் எம்மிடையே எத்தனையோ கல்விமான்கள் செல்வம் இல்லாமையால் செல்வாக்கு அற்றிருப்பதை நாம் காண்கிறோம் அல்லவா? ஆகையினால் மாயையின் கூற்றெனத் தள்ளிவிடாமல் நாம் செல்வத்தைத் தேடத்தான்வேண்டும். ஆயினும் செல்வம் அறவழி நின்று தேடப்படல் வேண்டும். “பிறர் பொருளையும் தன் பொருள்போல் போற்றிச்செய்தால் அதுவே வாணிகஞ் செய்வோருக்கு உரிய நல்ல வாணிக முறையாகும்” என வள்ளுவப் பெருமான் சொல்கிறார்.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்

இதனாற் கல்வி தேவைலயற்றதோவெனின் இல்லை. மேலைத் தேயத்திலே பெரும்பாலான கல்வி ஒரு தொழில் முறையை நோக்கியதாகவே முடிகிறது. இதனால், கல்வி செல்வத்தை முறையாகச் சேர்ப்பதற்கு வழிகோலுகின்றது. இவ்வாறாக, கல்வி, செல்வம் இரண்டும் இவ்வுலக வாழ்வுக்கு முக்கியமானவை என்றும், செல்வமே தவத்தையும் தர்மத்தையும் வழங்கவும் கல்விமான்களைத் தாங்கவும் உதவி செய்கின்றது என்றும் அச் செல்வத்துக்கு உரியமதிப்பைக் கொடுக்கும்படியும் கந்தபுராணம் சொல்லாநிற்கிறது.

# SAIVA SCHOOL OF HINDUISM

(By late S. Shivapadasundaram B.A)

**[Continued from last issue]**

CHAPTER 1
CONVENTIONAL RELIGION

***Before delving into the main subject of the Saiva School of Hinduism, this chapter describes the nature of the conventional religions, falsity of some of their claims and why they are failing. It will also highlight the value of religions in this world and what reforms are needed to sustain them.***

**The Conventional Nature of Religions**

There was a time when religion, in the sense of a creed, held undisputed sway over its followers, permeated their whole lives, and was all in all to them. It was the mother of all institutions. The powers of the king, the laws of the land, marital and family ties, and social organization derived their sanction from religion. The head of the State bowed to the will of the head of the Church; emperors stood on bended knees before the Pope. Kings consulted the Chief Priests before major decisions. Men braved death with ecstatic joy for the sake of religion.

Nothing was prized so highly as religion. This was because the body was regarded merely as the abode of the soul, as something of no intrinsic value, and worldly possessions as adjuncts of the valueless body. The soul was considered to be the only reality, and religion was supposed to be as valuable to the soul as air and food to the body. Religion gave sustenance and strength to the soul, and illumined it. This was when there was a single religion in a country without a rival. But when other religions came with a similar claim to divine origin, but with more acceptable views, and impinged on it, it ceased to be supreme and its glory became a thing of the past (The advent of Christianity, for instance, was a death blow to Druidism in Britain).

Instead of religion giving life, strength, and illumination to man, it had to receive them from him. Human frailty worked on it and gave it a tragic expression. It often assumed a militant spirit and brought in its train all the ignoble concomitants of war. It sowed enmity and hatred instead of love and peace, contempt and distrust instead of respect and good will, hypocrisy and corruption instead of sincerity and honesty.

The awakening of this spirit had had its repercussions on its internal working. Its benign influence was smothered and its power for good became negligibly small. Several other circumstances, both internal and external, such as formalism and commercialism, scientific scepticism and materialistic tendencies have also been at work sapping its vitality. Now it serves only as a label to mark out people, and that for no very good purpose. It has lost its claim to the name and retains it only by common consent. It has therefore become almost conventional. It is useful to find out how it met this fate and by what means it may be made a living force again.

## The Claim of Religions

Religions lay stress on two elements, doctrines and observances, and make extravagant claims regarding them. The authorship is attributed either to God or to a godly being. The doctrines relate to the self, the universe in which it is placed, its goal, and its master if any. The observances include forms of worship and rules of conduct. It is claimed by almost all religions that the doctrines are final and infallible truths, and that the observances lead to the highest conceivable happiness. The infallibility of the teachings and the effects of the observances are guaranteed by their divine origin. Few followers of a religion endeavour to examine the validity of these claims. The belief in them is instilled in childhood along with unquestioning love for it. This is strengthened by the faith displayed by other members of the community and is fed by the love implanted along with it. It becomes crystallized and its validity seems to be no more doubted than that of mathematical truths.

## The Falsity of the Claim

The belief in these claims has thus no substantial foundation, and the whole superstructure crumbles down under the impact of demonstrable truths. Those who do not by birth belong to a particular religion and have therefore not been inoculated with a belief in it are unable to accept its claims. In order to silence the doubts felt by such strangers and inquirers, an attempt is made to raise religion to the level of a mystic philosophy, which is supposed to transcend not only science but also the method of scientific approach.

A comparative study of any two religions is enough to make us see more clearly the intolerable nature of the claim for infallibility. Religions contradict one another on vital points. One religion says there is only one God, another says there are many, and a third says there is none. Again, one religion says that souls exist but have only one birth each, another says that souls undergo several births. These inconsistent teachings cannot all be truths, at least final truths. (Example: The following are truths but not final truths: (1) the body is real, (2) the soul is real and has one birth, (3) the soul is real and has many births. These become truths only when the reality of other things is denied)

Similarly, observances prescribed by different religions are diametrically opposed to one another. Some religions enjoin worship of idols; and some, of images; and others condemn the worship of both. Some insist on feasts on sacred days, others prohibit them and insist on fasts. Some divorce life from religion, others make it part of it. We know that of a number of inconsistent statements for any given purpose, all are false except one, and in some cases all are false without exception.

The priests and preachers of religions have admitted the fallibility of their religions in practice if not in theory. In this, like their religions, they occupy a false position. These men have thrown overboard fundamental doctrines of their religions, and have adopted fresh ones. There are Christian divines who, on account of the assaults of science, have given up long-cherished articles of the original creed, such as the Virgin Birth, the Resurrection, and the Atonement. They no longer regard the Gospels as trustworthy documents and have attempted to reconstruct the life of Jesus. Even the Roman Catholic Church, inspite of its greater orthodoxy, has entertained the idea of dethroning the Old Testament. The Vedic religion had flesh-eating thrust on it by the Shakta commentators of the Vedas, as has

been shown conclusively by Swamy Dayanand. It accepted Buddha as an avathar of Vishnu in order to swallow Buddhism.

Buddhism, in turn, took over the gods of the Vedic religion to catch the imagination of its followers. Such conduct on the part of the apostles of the various religions shows that their claim to infallibility is merely a pretence maintained for the sake of the effect that the theory of a divine origin undoubtedly has on the unreasoning crowd. The relinquishing of this claim would be followed by the relinquishing of the claim of divine origin.

If this is the true nature of their doctrines, their rituals and observances stand on still more insecure foundations. Of the observances, only some are religious; the others are really social. Regarding the social observances, opinion is divided as to whether they are an integral part of religion or only an adjunct of it. Those who regard them as part of religion endeavour to follow them with varying degrees of success, while others set no special value on them and make no effort to adhere to them. But there was a time when religious ceremonies were carefully performed. The belief in their divine origin, coupled with the hope of reward or the fear of punishment, compelled adherence. Besides, the priest as the most learned man in the locality and as the intermediary between God and man commanded the highest respect. His influence also made itself felt in the observance of religious exercises. So these exercises became almost part of the custom of the community that professed them, and the thought of giving them up would not ordinarily occur to any one. But the earnestness and zeal with which these were observed depended upon the capacity and the character of individuals.

Most people began with earnestness and devotion, but when the charm of novelty passed away the concomitant mental activity subsided and the exercise became automatic and almost meaningless.

A few exceptional souls were earnest to the very end, led saintly lives, and enriched their religion by their precepts and practices. But, on the whole, religious exercises have always tended to be rather nominal and unreal. Just now, even this nominal observance is fast disappearing. Home life is different from what it was at one time. Parents seldom exercise any influence over their children. They are themselves not devoted to religious exercises. Life has become complex. Man has harder work to do and more problems to solve, and therefore has not sufficient leisure to think of God. The changes that religions have undergone have diminished their claims to sanctity and the zeal of their adherents. Besides, these practices give no tangible results and do not therefore obtain precedence in daily life over the task of earning a livelihood or over pursuits which are more pleasant. The ordinary man selects a few exercises for observance and fancies that he follows the religion. These exercises are generally of little value and serve more as the outward distinguishing marks of his religion than as spiritual discipline and aids to devotion. Thus the inner life, which is the essence of religion, has ceased today to have any value (if it has not in fact been completely forgotten) by its nominal followers.

**continued on page 40.......**

# சுவாம்மலை

## பயணக் கட்டுரை



சுவாமிமலை = சுவாமி + மலை

இங்கே சுவாமி முருகனைக் குறிக்கிறது. மலை செயற்கையாக உருவாக்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் மலையே கிடையாது. முருகன் மலைவாசி என்ற காரணமோ தெரியாது 7 ஆம் நூற்றாண்டில், பல ஆயிரம் கருங் கற்களால் 60 அடி உயரத்தில் அமைந்தது இந்த மலை. இந்தக் கோயில் மாடக்கோயில் ஆகும். இம்மலையைக் குருமலை, சிவகிரி, சிவமலை எனவும் கூறுவர்.



இறைவன்: சுவாமிநாதன் - சுப்பையா (முருகன்)
தலவிருட்சம் : நெல்லிமரம்
தீர்த்தம்: வஜ்ரதீர்த்தம் - சரவண தீர்த்தம்
புராணப்பெயர்: திருவேரகம்

இத்தலத்தின்மேல் முப்பத்தெட்டுத் திருப்புகழ் பாடல்கள் பாடிய அருணகிரி நாதருக்கு பாத தரிசனம் கிடைத்த இடமாகும். சங்கத்தமிழ் நூலான திருமுருகாற்றுப்படை இத்தலத்தைப் போற்றுகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு முருகன் தலங்களுள் இதுவும் ஒன்று.

சிலப்பதிகாரம் - “சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் இரதமும் நீங்கா இறைவன்” எனக் கூறுகின்றது.

வரலாறு:

அகந்தை பிடித்த பிரம்மதேவர், அரனைக் காணக் கைலாசம் செல்லும் போது, எதிர்ப்பட்ட சிறுவன் முருகனைச் சட்டை செய்யாது சென்றார். முருகன் இதனால் பிரமனை அழைத்து பிரணவ மந்திரத்தின் பொருளைக் கேட்டார். இதுக்குப் பதில் கூற முடியாமல் திணறிய பிரமனைச் சிறையில் அடைத்தார். சிவபெருமானின் கோரிக்கையால் பிரமனைப் பின்னர் விடுதலை செய்தார் முருகன்.

சிவபெருமான் (அப்பன்) தனக்குப் பிரணவ மந்திரத்தை உபதேசிக்கும்படி வேண்டினார். இதனால், குருவின் நிலையில் தான் நின்று, தந்தையை அமரச்செய்து உபதேசித்தார். தகப்பனுக்கே குருவானதால் தகப்பன் சுவாமி என்ற பெயர் பெற்றார்.

“ஓம்” என்றால் என்ன?

பிறந்த குழந்தையைக் கவனிக்கவும். அ, உ ,ம, ம், ஓம் என ஒலி எழுப்பிப் ”பேசும்”.

அ + உ + ம் = ஓம். இதுதான் பிரணவ ஒலி.

அ - இறைவன்
உ - உலக உயிர்கள்
ம் - பஞ்சபூதங்கள்

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

மந்த் - நினைப்பது, திரம் - காப்பாற்றுவது பிரணவமந்திரம் மந்திரங்களின் அரசன். ஏனைய

மந்திரங்கள் "ஓம்" என ஆரம்பிக்கும் போது மிக சக்தி - உக்கிரம் பெறுகின்றன.
நாம், குறிப்பாக ஈழத் தமிழர்கள் பேசும்போது "ஆமாம்" என்று சொல்லாமல் "ஓம்" என்றே சொல்கிறோம். அதனால் நாமும் சதா "ஓம்" என்று ஆமாம் போட்டுச் சக்தியுடையவராகிறோம்.

சுவாமிமலை ஆலயம் மூன்று பிராகாரங்களைக் கொண்டதாகும். மூன்றாம் பிரகாரம் மலையின் அடியிலும், இரண்டாவது மத்தியிலும், முதலாவது, பிரதான பிரகாரம் உச்சியிலும் உள்ளன.

பிரயாணம்:
அன்று பொங்கல் தினம். மூலவர் செல்லும் வழியைப் பார்த்து நேரே சென்றோம். 60 அடி உயரமுள்ள கோயிலை அடைய 60 படிகள் உள்ளன. ஒவ்வொரு படியும் தமிழ் வருடங்களின் பெயரைக் குறிக்கின்றன. பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மனிதனும் இருமுறை - 120 வருடங்கள் வாழுதல் வேண்டும் எனவும் இவை கூறுகின்றன.

வருட ஆரம்பத்தில் படிப்பூசை நடைபெறுகின்றது. தேங்காய் உடைத்து, மஞ்சள் பூசி, குங்குமம் வைத்து, பால், பழம், துணிவைத்து தீபம் ஏற்றி, பாடல்களுடன் படிப்பூசை நடைபெறுகிறது. படிகளைப் பிடித்துக்கொண்டு ஏற வசதியுண்டு, பயமில்லை. படிக்கட்டுகளுக்கு கிழக்கே தலவிருட்சமான நெல்லிமரத்தைக் காணலாம். இவ்விருட்சத்தைப் பூமாதேவியின் சொரூபமாகக் கருதுகின்றனர்.

30 படிகள் ஏறிய பின்னர் கிழக்கே நோக்கினால் திறந்த மண்டபத்தில் சுதை வடிவில் முருகன் தந்தைக்கு உபதேசம் செய்யும் காட்சியைக் காணலாம். இதன்பின்னர் படிகள் சற்று வளைந்து செல்கின்றன. ஏறுவது சுலபமானது.



முதல் பிரகாரத்தில் கிழக்கு நோக்கிய கருவறை. அறுபடைவீடு முருகன் ஆறு அடி உயரத்தில், நின்ற நிலையில் வலது கரத்தில் தண்டமும், இடது கரம் மேற்காலிலும் வைத்து, சிரசில் ஊர்த்துவ சிகாமுடியும் (உச்சிக்குடுமி) மார்பில் பூணூலும் தரித்து, உருத்திராட்ச மாலையுடன் காட்சியளிக்கின்றார்.

நாங்கள் சென்ற சமயம் விபூதியினால் அலங்கரிக்கப்பட்ட முருகனைக் கண்ணாரக் கண்டோம். இடத்தைவிட்டு அகலவே மனமில்லை. பார்த்துக் கொண்டே இருந்தோம். புதிய அநுபவம் - பசுமரத்தாணிபோல் தற்போதும் நிலைத்து நிற்கிறது. இந்தத் திருவுருவம் ஞானமூர்த்தி சொரூபம் என அறிந்தோம்.

காலை வேளை சென்ற நாம் மதியம் வரை முருகனின் அபிடேகம் நடக்கும் வரை அங்கேயே இருந்தோம். மதிய அலங்காரம் முறையாகச் செய்து, பூசை முடிந்த பின்னர் முன்பு ஏற்பட்ட அநுபவம் போல் இருக்கவில்லை.

முருகனுக்கு விபூதி அலங்காரம் - பழுத்த ஞானியாக, சந்தன அபிடேகம் - பாலசுப்பிரமணியராக
முருகன் நிற்கும் பீடம் - சிவலிங்க ஆவுடையார் மூர்த்தி - பாணலிங்கம்
இதிலிருந்து முருகனும், சிவனும் ஒன்று என்பது புலனாகிறது.

வஜ்ரவேல் - மூன்று சக்திகளைக் கொண்டது - இச்சா, கிரியா, ஞான சக்திகளாகும்.
கருவறைக்கு முன்னால் யானை வாகனம் உள்ளது. மயில் அன்று. கரிகேசன் என்ற அரக்கனை முருகன் வென்றதால், இந்திரன் ஐராவதம் என்ற இந்த யானையைப் பரிசாகக் கொடுத்தான்.

கண் கொடுத்த கணபதியாரை இங்கு தரிசிக்கலாம். இவர் செட்டி நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவருக்குக் கண்பார்வை அருளியவர்.

பலவருடங்களுக்குப் பின்னர் மீண்டும் இங்கு சென்றோம். முதலில் சமீபத்திலிருக்கும் வலஞ்சுழி விநாயகரை, அவரது மூன்றாம் திருவிழா அன்று தரிசித்துச் சென்றோம். இவ் விநாயகரைத் தரிசித்த பின்னர் சுவாமிமலை செல்லல் வேண்டும் என்ற மரபு உண்டு.

தெற்கு வாசலில் உள்ள இராஜகோபுரம் 5 நிலைகளோடு சிறப்பான சிற்பங்களோடு காட்சியளிக்கிறது. கோபுரத்தில் ”ஓம்” என்ற பிரணவமந்திரம் பெரிதாகக் காட்சியளிக்கிறது. வேல் தான் அநேகமாக முருகன் ஆலயங்களில் காட்சியளிக்கும். இங்கு ”ஓம்” என்ற மந்திரம் உபதேசித்தது காரணமாக இருக்கலாம்.

உள்ளே சென்றதும் மேளதாள ஓசைகள் வரவேற்றன. மூன்றோ, நான்கோ திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. திருக்கல்யாண மண்டபத்தில் ஒரே சனக் கும்பல். மங்களமாகவும், பிரமாதமாகவும் இருந்தது. இப்பிரகாரத்தில் மீனாட்சி அம்மன், சுந்தரேஸ்வரர், விநாயகர், சோமாஸ்கந்தர், விசுவநாதர், விசாலாட்சி, தட்சிணாமூர்த்தி ஆகிய தெய்வங்களைத் தரிசிக்கலாம். சுவாமிமலை நான்காவது படைவீடாகும். ஆதாரத்தில் - அநாகதம்,

உல்லாச, நிராகுல, யோக, வித (இத)
சல்லாப விநோதனும் நீ அலையோ
- கந்தர் அநுபூதி

இத - நன்மை பயப்பவன்.
நன்மை பயப்பவனும், உபதேச மூர்த்தியாக உள்ளவனுமான முருகனின் அருள் பெற்றால், நற்கல்யாணமும், சற்புத்திரரும் கிடைக்கும் என்ற திண்மையான எண்ணம் இங்குண்டு. ஆதலால் தான் திருமணங்கள் அதிகமாக இங்கு நடைபெறுகின்றன.

திருவேரகம் = திரு + ஏர் + அகம்
திரு - சிறப்பு, ஏர் - விவசாயம் - அழகு, அகம் - இடம், மூர்த்தி - திரு ஏரக மூர்த்தி
முதன்முறையாக இந்தமுறை காவேரிக் கரையாலே சென்றோம். அப்போதுதான் பசுமையான மரங்கள், மூங்கில்கள், வயல்கள் யாவையும் கண்ணுற்றோம். ஆலயத்திற்குச் சமீபமாகப் பப்பாசி மரங்கள் யாவும் வரவேற்றன.

சுவாமிமலை ஆலயம் கும்பகோண சப்தஸ்தலங்களில் ஒன்றாகும்.

நிறைமதி முகமெனு மொளியாலே
நெறிவிழி கணையெனு நிகராலே
உறவுகொள் மடவர்க ளுறவாமோ
உனதிரு வடிவியினி யருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமண மருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே.
- திருப்புகழ்

திறந்திருக்கும் நேரம் காலை 6 மணி - மதியம் 12 மணி, மாலை 4 மணி - இரவு 8 மணி

சித்திரை மாதம் கொடியேற்ற விழா - 10 நாள்கள்
வைகாசி விசாகம், ஆனி உத்தரம், கந்த சஷ்டி ஆகியவை விசேடமான திருநாள்கள். செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மாலைகளில் முருகனின் அலங்காரம் சோபிக்கிறது.

தங்கரதம் - வெள்ளிரதம் இந்தக் கோயிலில் உண்டு.

கும்பகோணத்திலிருந்து மேற்குப்பக்கமாக, திருவையாறு செல்லும் வழியில் சுமார் 8 கி.மீ தொலைவில் உள்ளது சுவாமிமலை. பேருந்து வசதிகள் தாராளமாக உள்ளன. கும்பகோண புகையிரத நிலையம் சமீபமானது.
விமான நிலையம் - மதுரை - சென்னை

வேதத்தினால் - ரிஷிகளையும், ஹோமத்தினால் - தேவர்களையும், சிரார்த்தத்தினால் - பிதிர்களையும், அன்னத்தினால் - அதிதிகளையும், மலரினால் - பூதங்களையும், உழைப்பினால் - தன் எசமானையும், தரிசனத்தால் - தெய்வங்களையும், பிரியத்தால் - பெற்றோர்களையும் அன்பால் - மனைவியையும், கண்டிப்புடன் கூடிய பாசத்தால் - பிள்ளைகளையும் திருப்தி செய்ய வேண்டியது தர்மமாகும்.

- இந்து தர்ம சாஸ்திரம்



## சோரன்


பொருள் திருடும் கள்ளனை நாமறிவோம். ஆனால் "உள்ளம் கவர் கள்வ"னை நாம் உணர முடியவில்லை; முயன்றாலும் அவன் மறைந்துவிடுகிறான். அவன் சோரம் புரியாது தங்கும் இடம் ஒன்று உண்டு. அதுதான் சிவஞானம் பெற்ற திருவாளர் உள்ளம்.

சிவபெருமான் ஒரு பெரிய கள்ளன். அப்பெருமான் ஒளிமயமானவன். ஆனால் மறைந்திருக்கிறான். "மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" என்கிறார் அப்பரடிகள்.

"உள்ளம் கவர் கள்வன்" என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு.

- திருமுருக கிருபாநந்தவாரியார், திருவாசகத் தேன்.

# திருக்குறிப்புத் தொண்ட நாயனார்



திரு க. செல்வரத்தினம்

தனிப் பெரும் தணல் மேனியனைத் தழுவிச் சுகம் காணத் தாயாய் விளங்கும் உமாதேவியார் தவம் செய்த வளநாடு தொண்டை நாடு. சிறந்த நால்வகை நிலமும் வளமார் ஊர்களும் கொண்டது. இல்லறம் புரிந்து வாழும் பெருங்குடி மக்களும், வேள்விகள் செய்யும் வேத விற்பன்னரகளும் வாழும் இடம். மங்காச் செல்வமும் மறையாக் கல்வியும் கொண்டு முகில்கள் தவழும் மாட மாளிகைகள் நிறை மாநகர் காஞ்சி. மங்காப் புகழுடைய நாட்டின் குறிஞ்சிக் குன்றில் இருந்து மாணிக்கங்களைச் சுமந்து மலையருவி இறங்கும். முல்லை நிலங்களில் மலர்களில் மூழ்கிய வண்டுகள் மதுவருந்தி மயங்கிக் கிடக்கும். மருத நிலத்துத் தடாகங்களில் வாழை மீன்கள் வயலில் பாய்ந்து வரம்பை இடிக்கும். நெய்தல் நிலத்தில் பரத்தியர் முத்துக்கள் கழுவி முற்றத்தில் உலர்த்துவர். குறிஞ்சிக் குறவர் குவிந்த விதைகளை விதைப்பர்.

தொண்டை நாட்டு வாய்மைச் சிறப்புக்கு நீலியின் கதை:

நற்றி றம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்து
உற்ற போதுதம் உயிரையும் வணிகனுக்கு ஒருகால்
சொற்ற மெய்ம்மையும் தூக்கிஅச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழந்தது பெருந்தொண்டை நாடு
(திருத்தொண்டர் புராணம் - *03*)

தொண்டை நாடு வாய்மைக்கு எடுத்துக் காட்டாக நீலியின் கதை குறிப்பிடத்தக்கது. வணிக குடும்பத்தன் ஒருத்தன் பரத்தையர் வசப்பட்டான். அவனை நல்வழிப் படுத்த. அவன் மனைவி பெரிதும் முயன்றாள். கூட்டிச் சென்ற கணவன் அவளை இடைவழியில் வைத்துக் கொலை செய்தான். இறந்தபின் அவள் நீலிப்பேயானாள். அவனோ வணிகனாக வாழ்ந்து வரலானான். அவனுக்குப் கொலைப்பழி தொடருவதால் பெரியவர் ஒரு வாளைக் கொடுத்து அது அவனது கையில் இருக்கும்வரை தீங்கு நேராது எனக்கூறிச் சென்றார்.

வியாபார நோக்கத்திற்காக வணிகன் சென்றபோது நீலியோ பழி வாங்க அவனைப் பேயாகத் தொடர்ந்து கொண்டிருந்தாள். அங்கே எழுபது பேர் உள்ள நீதிமன்றத்தில் “இவன் என் கணவன், என்னை வெறுத்து, பிரிந்து வாழ்கின்றான்” என்றாள். அவனோடு வாழ விரும்பினாள். அவனோ இவள் பேய் என்றான். மாயக் குழந்தை ஒன்றை இடுப்பில் இருந்து அவள் இறக்கிவிட, அது வணிகனுடன் ஓடி விளையாடிற்று. அவனிடம் இருக்கும் வாளால் தன்னைக் கொல்லக் கூடும், பயமாக இருக்கிறது என்றும் நீலி கூறினாள். குழந்தையையும் அவளது வேண்டுதல்களையும் செவிமடுத்த சபையினர் உண்மை என நம்பி, அவனிடம் இருந்த வாளைப் பெற்றுக் கொண்டு அவனை அவளுடன் சேர்ந்து போகும்படி கட்டளை பிறப்பித்தனர். உன் உயிருக்கு எமது உயிரைக் கொடுப்போம் என்றனர். வணிகன் நீலியுடன் மண்டபத்துள் நுழைந்தான். நீலி அவனைக் கிழித்துக் கொன்றாள். மீண்டும் நீலி செட்டியின் தாய்போல வடிவங்கொண்டு, “என்மகனைக் காணவில்லை. இங்கே தான் வந்தான் என்று கேள்வியுற்றேன்” என்று முறையிட்டாள். வேளாளர்கள் மண்டபத்தின் கதவைத் திறந்தார்கள். வணிகன் மாண்டு கிடப்பதைக் கண்டு தாங்கள் கூறிய உறுதி மொழிப்படி தீ வளர்த்து உயிர் துறந்தனர். அவர்கள் தீக்குளித்த இடம் நீலி குளம் என வழங்குகிறது.

நாயனார் காலத்தில் மக்கள் தத்தம் சாதியினருடன் பொருந்தி தனித்தனிக் குழுவாக இருந்தனர் என்பதைச் சேக்கிழார் பின்வருமாறு கூறுகிறார்:

ஓங்கிய நாற்குலத்து ஒவ்வாப் புணர்வில் தம்மில்
உயர்ந்தனவும் இழிந்தனவம் ஆன சாதி
தாம்குழுமிப் பிறந்த குல பேதம் எல்லாம்
தம் தகைமைக்கு எற்ற தனி இடங்கள் மேவி..
(திருத்தொண்டர் புராணம் - 103)

திருக்குறிப்புத் தொண்டர் சிறந்த பண்புகள்:

வண்ணம் பூச்சு பூசுபவர்கள் வண்ணார் என அழைக்கப்பட்டு வந்தனர். அவர்கள் "ஏகாலியர்" எனவும் அழைக்கப்பட்டனர். அக்காலத்தில் அரச வண்ணார், ஆலய வண்ணார் முக்கியமானவர்கள். எனினும் ஆலய வண்ணார் பெருமை கொண்டவர்களாகக் கருதப் பட்டனர். காரணம், இறை உறையும் விக்கிரகங்கள் அணியும் ஆடைகளைத் துவைத்து கொடுப்பதால் பெருமதிப்புப் பெற்றனர். சாதாரண அழுக்கு உடைகளைத் துவைத்து வந்தமையால் அத்தகைய இடத்தைத் திருகுறிப்புத் தொண்டர் வகிக்கவில்லை. எனினும், ஆலயத்துக்கு போய்த் தமது வேண்டுதல்களைத் தெரியப்படுத்தச் செல்பவர்களின் ஆடை அழுக்குகளை சுத்தப்படுத்தி அதன்மூலம் ஆலய வண்ணார் போல வாழ மனத்தினால் விரும்பினார்.

விக்கிரகங்கள் அணியும் ஆடைகளின் அழுக்குகளைப் போக்குபவர்கள் என்பதால் மட்டுமன்றித் தொண்டர் சாப்பிட்டு வந்துள்ளனரா, அவர்களுக்கு வேறு பிரசினைகள் உண்டா என ஊடறுத்து அறியும் தன்மயை வளர்த்துக் கொண்டவராதலால் "திருக்குறிப்புத் தொண்டர்" எனப் பெயர் பெற்றார்.

"........திருக்குறிப்பு அறிந்து போற்றுநிலைத்
திண்மையினால் திருக்குறிப்புத் தொண்டர்எனுஞ் சிறப்பினார்"
(திருத்தொண்டர் புராணம் - 112)

பசுபதியாகிய சிவனையே தமக்குறவு எனத் துணிந்து மெய்யுணர்வுடையோருடன் கூடி இருந்து, உயிர்ச் சார்பு பொருள்களிலும் சரீரத்திலும் சிறிதும் பற்று வையாது, சிவனிடத்தில் இடையறாத மெய்யன்புடைய சிந்தை, சொல், செயல் மூன்றையும் சிவபெருமானின் சேவடிக்கே வைத்தவர். "புண்ணிய மெய்த் தொண்டர்" மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் அவருக்கே திருத்தொண்டு செய்து ஒழுகி வாழ்ந்து வந்தார். சிவனடியாரைச் சிவன் எனவே கண்டு வணங்கி அவர் குறிப்பறிந்து அவருக்குத் தம்மால் இயலும் தொண்டைச் செய்வதே தமது செல்வம் எனக் கொள்வர். தாம் ஏகாலியராதலின் சிவனடியார்களுக்குச் சிரத்தையோடு ஆடை துவைத்துக் கொடுத்தலே முக்கிய தொண்டாகக் கொண்டார்.

மண்ணின் மிசை வந்ததன்பின் மனம் முதலாயின மூன்றும்
அண்ணலார் சேவடியின் சார்வு ஆக அணைவிப்பார்
புண்ணியமெய்த் தொண்டர் திருக்குறிப்பு அறிந்து போற்றும் நிலைத்
திண்மையினால் திருக்குறிப்புத் தொண்டர் எனும் சிறப்பினார்.
(திருத்தொண்டர் புராணம் - 112)

வண்ணார் வாழ்வு:

அன்றைய காலத்தில் அடிமட்ட ஏழையாய் வாழ்ந்தவர். ஒரு சில ஆடைகளைத் துவைத்தால் தானியம் அல்லது உணவு கிடைக்கும். எந்த நேரமும் எறும்பு போல வாழ்வில் வேகமாக ஓடிக் கொண்டே இருப்பர். அழுக்குத்துணிகள் துவைத்து வாழ்ந்து வந்தமையால் சூக்கும சக்தியைப் பெற்று விடுவர். சில ஏகாலியர்கள் தூதர்களாகவும் மந்திரசக்தி ஆற்றல் கொண்டவர்களாகவும் இருந்தனர். சில இடங்களில் திருமணத் தரகர்களாகவும் செயற்பட்டனர்.

உவர்மண் நீரில் பலமுறை அலசி அழுக்கினைக் கைகளால் கசக்கி நீக்கியபின், பாறைக்கல்லில் அடித்து வெள்ளாவியில் வைத்துக் கஞ்சிநீரில் வாசனைத் திரவியங்களைச் சேர்த்து உலர வைத்து இஸ்திரிகை பண்ணி மடித்துக் கொடுப்பர்.

குளிர் காலத்தில் ஒருநாள், சிவபெருமான் திருநீறு பூசி, அழுக்கேறிய கந்தை உடுத்தி மெலிந்த மேனியராய் வறியவராய் திருக்குறிப்புத் தொண்டர் வாழும் தெருவீதிவழியாக நடந்தார்.

“தவசியரே! திருமேனி இளைத்திருப்பது ஏன்? தங்கள் ஆடைகளைத் தந்தருள்வீர். ஆழகாய் வெளுத்து அப்படியே தருவேன்” என நாயனார் கேட்டார்.

“கடுங்குளிரில் இருந்து என்னைக் காப்பது இதுவே. கதிரவன் மறையுமுன் வெளுத்துத் தருவீராயின் தருவேன். வார்த்தை தவறினால் எனது உடலை வருத்தியவர் ஆவீர்” எனக் கூறிக் கந்தையைக் கொடுத்தான் கனல் மேனியன்.

திருவருட்சோதனையால் திரண்டு இருண்டது கருமேகம். கன மழை பெய்தது. உள்ளம் வருந்தினார் திருத்தொண்டர். என்ன செய்வார்! மழை விடவுங்கூடும் என நினைக்கிறார். ஆனால் மழை விடவில்லை.

“...கருமேகம் எனஅழுக்குக் கந்தையுடன் எழுந்தருளி
வருமேனி அருந்தவரைக் கண்டுமனம் மகிழ்ந்து எதிர் கொண்டு
உருமேவும் மயிர்ப் புளகம் உளஆகப் பணிந்து எழுந்தார்”

(திருத்தொண்டர் புராணம் - 117)

மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது. அடியவர் துன்பப்படுவார் என எண்ணி நிலத்தில் வீழ்ந்தார். “இறை அடியவருக்கு கொடுமை செய்து விட்டேன்” எனத் தமது வருத்தத்தை வெளியிட்டார்.

“மேனியைக் குளிரினால் வருந்தச் செய்தேன். பாவியானேன்” என்று எண்ணி எழுந்தார்.

திருக்குறிப்புத் தொண்டர் என்ன செய்வார்? மழை பெய்கிறது. விடவுங்கூடும். ஆனால் மழை விடவில்லை. “அடியேன் குற்றேவல் தவறிற்றே” என்று நாயனார் விழுந்தார். “அடியவர் திருமேனியைக் குளிரினால் வருந்தச்செய்தேன். பாவியானேன்” என்று பாறைக் கல்லில் தலையை மோதினார்

அங்கே, சிவபெருமானின் திருக்கை திருக்குறிப்பு தொண்ட நாயனாரைப் பற்றிக் கொண்டது. பூ மழை பொழிந்தது. சிவபெருமான் உமையம்மையுடன் விடைமேல் தோன்றினார். நாயனார் மெய்ம் மறந்து பணிந்து கை கூப்பித் தொழுது நின்றார். “நீ எமது உலகை அடைவாயாக!” என்று அருள் சுரந்து இறைவர் மறைந்தருளினார்.

இறைவன் சர்வ ஆன்மாக்களும் தம்மாட்டு மெய்யன்பு செய்து உய்தல் வேண்டுமென்ற பெருங் கருணையினால் இவரின் அன்பின் செயலை மூவுலகத்திற்கும் அறிவித்தார். இது கண்டும் சிவனிடத்தே அன்பு செலுத்தாமல், அறியாமையால் வீணாளாகப் போக்கும் போலிகளினது நிலையை என்னென்று சொல்வது! புனல் மழை பொழிந்தது. பூ மழை பொழிந்தது. சிவ பெருமான் உமையம்மையாருடன் மழைவிடை மேல் தோன்றினார். நாயனார் மெயம்மறந்து பணிந்து நின்றார்.

நாயனார் தமது முயற்சியை நம்பினார். அது இயற்கை. மழை பெய்தமை அவரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது. அதை அவர் உணரத் தவறினார். நோக்கம் நல்லது; ஆனால் தம்மிலும் மேற்பட்ட சக்தி உண்டு என அவர் உணரும்வரை அது கை கூடவில்லை.

# ஆன்மிகத் துளிகள்

**சி. ராஜ்குமார் (சிவமைந்தன்) சிந்தனையிலிருந்து**

ஜொலிக்கும் வைரத்தை மறைக்கும் சாணம்போல் அறிவினைக் கெடுப்பது சினம். சினங்கொண்ட நேரத்தில் மனம் இழந்த குணம் உனக்கு. கோபமும், காமமும் இருக்கும் இடத்தில் சிவம் உன்னிடம் வெளிப்படாது.

நீ தோற்றுப்போனாய் என்பதற்காக நீ தாழ்ந்து போனாய் என்று எண்ணாதே. அதற்காக சோர்ந்து போகலாம் சரி. நீ எதற்காகத் தோற்றாயோ அதைவிடப் பெரிய விஷயத்தைத் தருவதற்காகவே கடவுள் அதைச் செய்திருக்கிறார் என நம்பு.

God’s creation is beyond miracle. உலகமே மாயமென உன் மனதில் கண்டு நலமாக நாதனடி நம்பு.

கல்லாமை, அறியாமை சாத்தியமுண்டு. நான் படைத்த படைப்பில் இல்லாமை, இயலாமை சாத்தியமில்லை. உன்னைச் செய்தது நானே! உன் சிவனே!

தயவு செய்து எந்த நொடியிலும் serious ஆக இருக்காதீர்கள். அது கடுமையான நோய் தெரியுமா?

உன்னிடம் kindness, respect இருக்கும் வரையில் கடவுள் உன்னிடம் kind ஆக இருப்பார். உலகமே உன்னை respect பண்ணும்.

நிம்மதி உனக்குள்ளேயே தான் இருக்கு என நீ உணர்ந்தாயானால் அதுவே அவனின் அநுக்கிரகம்.

Having the ability to find peace in your own self. நீ நினைத்த வாழ்வை யாருடைய தயவும் இல்லாமல் வாழ நினைப்பது இருக்கே, அது தான் சூட்சுமம்.

# சுழற்சி

## சித்தர்கள் பக்கம்

எல்லாக் கிரகங்களும் ஏதோ ஒரு வழியில் சுழன்று கொண்டே இருக்கின்றன. அதனதன் சுழற்சிக்கேற்பவே இந்த உலகமும் இயங்குகின்றது. விநாடிக்கு விநாடி எல்லாமே மாறிக்கொண்டிருக்கின்றன. இதையே, "மாற்றம் ஒன்றே மாறாதது" என்கிறார்கள். இவை எல்லாமே ஒரு நியதியின்படியே நடக்கின்றன. பிறப்பு என்ற நிகழ்ச்சியும், இறப்பு என்ற நிகழ்வும் உலகில் உள்ள அனைத்து சீவராசிகளுக்கும் இதுதான் நியதி .

இதையே சித்தர் "சிவவாக்கியர்"

பிறப்பதும் இறப்பதும் பிறந்திடாது இருப்பதும்
மறப்பதும் நினைப்பதும் மறந்ததை தெளிந்ததும்
துறப்பதும் தொகுப்பதும் சுகித்துவாரி உண்பதும்
பிறப்பதும் இறப்பதும் பிறந்த வீடு அடங்குமே.

என்றார்.

நீயே எல்லாம் என் அப்பன் நீ ! என் ஆத்தாளும் நீ ! என்னுடைய உறவுகள் யாவும் நீயே ! நான் வணங்கும் தேவதைகளும் நீதான். என் நினைவுகள் நீ! என்னுடைய விந்தில் இருப்பவனும் நீ தான் ! விந்தினால் ஏற்படும் உற்பத்தியும் நீதான் ! நான்கு வேதங்களாகியவற்றிலும் இருப்ப வனுமாகிய இறைவனும் நீதான் !
இதையே

தந்தை தாய் தமரும் நீ சகல தேவதையும் நீ
சிந்தை நீ தெளிவும் நீ சித்திமுத்த தானும் நீ
விந்து நீ விளைவும் நீ மேலாய வேதம் நீ
எந்தை நீ இறைவ நீ எனையாண்ட ஈசனே!.

**சிவபுத்திரன்**

சித்தர் சிவவாக்கியர் நீயே எல்லாம் என்கிறார்.



# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com




உ

# சிவயோகம்
## SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)



## இந்து கலாசார மையம்
## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்
128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881





சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் **Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS**

நன்றி

**ஆலய நிர்வாகத்தினர்**

Muththumari Amman Temple Sivayogam



"Ammanai Saran Addainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

## அம்பிகையின் திருவருளை பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்க

# அன்னதானம் செய்ய அரிய வாய்ப்பு




உங்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் பிறந்தநாள், திருமணநாள், நினைவு நாள் மற்றும் உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

## அன்னதானம் செய்யலாம்...

உங்களின் **£100** பங்களிப்பு

பல பேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்....

இப்புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு உதவுவதற்கு தாயாராக இருக்கின்றோம்.

(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு தின புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

**YOU CAN CONTRIBUTE FOOD**

**DONATION £100** NO ADMINISTRATION CHARGES

to Orphanages or Elders Home in Sri Lanka

on Your Birthday, Wedding Day

Remembrance Day

or Any Other Special Function




**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 06905358**

## அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்

**Please donate as much as you can!**


Veena's
SHOP ONLINE @ www.veenas.com
020 8550 2700
Asian, Oriental & Afro-Caribbean food Speciality
Veena's
FRESH VEGETABLES & GROCERIES FROM AROUND THE WORLD
Veena's CASH & CARRY
Veena's
Fancy - Fashion - Household
www.veenas.com
Veena's
Greens
61-63, 69 & 77-79 High Street, Barkingside, Ilford IG6 2AF, London, UK


Veemart .co.uk
SHOP ONLINE @
www.veemart.co.uk
020 3598 4406
world food • wine • household • stationery • party ware
Veemart.co.uk
020 3598 4406
115-123
115-125 High Street, Barkingside, Essex, Ilford, IG6 2AJ, United Kingdom

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஏப்பிரில் (14-04-2024) தொடக்கம் ஜூலை (16-07-2024) வரை

| | | |
|---|---|---|
| *18.04.2024* | வியாழன் | வசந்த நவராத்திரி நிறைவு |
| *18.04.2024* | வியாழன் | வசந்த நவராத்திரி நிறைவு |
| *20.04.2024* | சனி | பிரதோஷம் |
| *23.04.2024* | செவ்வாய் | சித்திரைப் பௌர்ணமி |
| *01.05.2024* | புதன் | நடேசர் அபிஷேகம் |
| *03.05.2024* | வெள்ளி | திருநாவுக்கரசர் குருபூசை |
| *05.05.2024* | ஞாயிறு | பிரதோஷம் |
| *20.05.2024* | திங்கள் | பிரதோஷம் |
| *22.05.2024* | புதன் | வைகாசி விசாகம் |
| *25.05.2024* | சனி | திருஞானசம்பந்தர் குருபூசை |
| *03.06.2024* | திங்கள் | பிரதோஷம் |
| *10.06.2024* | திங்கள் | சேக்கிழார் குருபூசை |
| *19.06.2024* | புதன் | பிரதோஷம் |
| *03.07.2024* | புதன் | பிரதோஷம், கொடியேற்றம் |
| *09.07.2024* | செவ்வாய் | மாணிக்கவாசகர் குருபூசை |
| *11.07.2024* | வியாழன் | தேர் உற்சவம் |
| *12.07.2024* | வெள்ளி | ஆனி உத்தரம், நடேசர் அபிஷேகம் |
| *16.07.2024* | செவ்வாய் | ஆடிப்பிறப்பு |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

***"Community Service Through Saiva (Hindu) Concern"***

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | | |
|---|---|---|---|---|
| Title | | Home Phone | | |
| First Name | | Mobile No | | |
| Surname | | Email ID | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | |
| Post code | | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

giftaid it

*Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.*

*By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.*

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# இராசன் வாத்தியார்

முத்து

இலண்டனில் கோடை காலம் முடிந்து குளிர்காலம் (Winter) ஆரம்பித்துவிட்டது. எல்லோரும் குளிரைப் பற்றியே பேசிக் கொள்கிறார்கள். தாயகத்திலிருந்து இங்கு வந்து குடியேறியோருக்கு குளிர்காலத்தை எதிர்கொள்வதில் விருப்பமில்லை. இருந்தாலும் இயற்கையை வெல்ல முடியுமா? கார்த்திகை, மார்கழி மாதங்களில் குளிர் கூடுவதும் பனி பெய்வதும் வழக்கம். ஆனால் இந்த முறை நம் நாட்டைப் போல இங்கு கடும் மழை. அத்துடன் குளிர்காற்றும் சுழன்றடிக்கிறது. காற்றின் வேகத்தினால் குடை பிடிப்பதும் கஷ்டமாகவே இருந்தது. இருந்த போதும் இராசன் வாத்தியார் காற்றுக்குப் பறந்து விடாமல் பெரிய குடையொன்றைப் பிடித்துக் கொண்டு வேகமாக வகுப்புக்கு வந்து சேர்கிறார். இந்த வகுப்புக்குத் தமிழ் படிப்பிப்பதென்றாலே வாத்தியாருக்கும் பெரும் ஆனந்தம். ஏனென்றால், தமிழ் படிப்பதில் ஆர்வமிக்க பிள்ளைகள் இருந்தார்கள். படிப்பதை இரசிக்கும் வயதும் கூட. அதனால் வாத்தியார் வகுப்புக்கு வர என்றுமே தவறியதில்லை.

வாத்தியார்: வணக்கம் பிள்ளைகளே! எல்லோரும் இன்று மிக உற்சாகமாக இருக்கிறீர்கள்.

பிள்ளைகள்: வணக்கம் சேர். (தாயைக்கண்ட பிள்ளைகள் போல) மிக ஆர்வத்துடன் வரவேற்கின்றனர். உங்களைக் கண்டாலே உற்சாகம் தானாகவே வந்து விடுகிறது சேர்.

வாத்தியார்: அதுதான் எங்கள் தாய்மொழி தமிழின் சிறப்பு, பிள்ளைகளே. தமிழ் கற்பதே இன்பம். கற்பிப்பதும் இன்பம். நாங்கள் முடிந்தளவு படிப்போம். அமருங்கள் குழந்தைகளே!

அமுதா: (சிரித்துக் கொண்டே ) என்ன சேர் நாங்கள் எல்லோரும் Teen age இல் இருக்கிறோம் நீங்கள் எங்களைக் குழந்தைகளே என்கிறீர்கள்.

வாத்தியார்: ஓம் அமுதா! நீங்கள் எப்போதும் எனக்குக் குழந்தைகள் தான். இப்போது குழந்தைப் பருவத்தை விட்டு கொஞ்சம் வளர்ந்திருக்கிறீர்கள். உலகத்தைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறீர்கள். கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து கொள்வீர்கள். இப்போது, சென்ற வகுப்பில் விட்டதிலிருந்து படிக்கத் தொடங்குவோம். அன்று எதைப் படித்தோம்? எங்கே நிறுத்தினோம்? சொல்லுங்கள்.

அமுதா: நாங்கள் ஔவையாரின் மூதுரையில் வரும் ”நீரளவே ஆகுமாம்” என்று ஆரம்பிக்கும் பாடலில் முதல் ”இரண்டு வரிகளுக்கும் கருத்துப் படித்தோம்.

வாத்தியார்: கெட்டிக்காரி. பாடல் பாடமாக்கினீர்களா?

கீதா: (மற்ற மாணவர்களும்) ஓம் எல்லோருக்கும் மனப்பாடம் சேர்.

வாத்தியார்: இப்போ படிக்க இருக்கும் வரிகளைச் சொல்லுங்கோ பார்ப்போம் .

(மாணவர்கள் எல்லோரும் சரியாகவே சொல்கிறார்கள்.)

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம்.

வாத்தியார்: இப்போது உங்கள் எல்லோருக்கும் செல்வம் என்றால் தெரியும் தானே?

ராம்: ஓம் தெரியும் சேர். ஒருவரிடம் இருக்கின்ற பணம் பொருள் வீடு என்பன சேர்.

வாத்தியார்: பிள்ளைகள் கூடச் செல்வம் தான். பிள்ளைகள் இல்லாவிட்டால் வீடு சந்தோஷமாக இருக்காது.

கண்ணன்: கல்வியும் செல்வம் தான் என்று பாட்டி சொல்லுவா சேர். அதனால் நன்றாகப் படிக்கவேண்டும் என்பா.

அமுதா: கல்வியைப் பற்றிப் படிக்கும் போது கல்விச் செல்வம் அழியாது. பொருட் செல்வம் அழிந்து போகலாம் என்று படித்திருக்கிறோம் சேர்.

வாத்தியார்: படித்ததை, கேட்டதை எல்லாம் நினைவில் வைத்திருக்கிறீர்கள் பிள்ளைகளே மிக்க மகிழ்ச்சி. சரி மிச்சத்தைப் படிப்போம், மேலை - என்றால் முன்பு என்ற, முற்பிறப்பு என்ற கருத்தாகும். முன்பு ஒருவர் செய்த புண்ணியத்திற்கு ஏற்ப அவர்களுக்குச் செல்வம் கிடைக்கும்.

கீதா: புண்ணியம் என்றால் என்ன சேர்?

வாத்தியார்: நல்லவர்களாக வாழ்ந்து பிறருக்கு முடிந்தளவு நன்மைகள் செய்தல் ஏழைகளுக்குப் பொருள் கொடுத்துதவுதல் கல்வி கற்க உதவுதல். இப்படிப் பல நன்மைகளைச் செய்தல். நல்ல ஒழுக்கமாக வாழ்தல் இப்படியானவற்றை ஒருவர் முன்பு (முற்பிறப்பில்) செய்திருந்தால் அவர்களுக்கு வசதியாக வாழச் செல்வம் கிடைக்கும்.

கண்ணன்: குலத்தளவே ஆகும் என்றால் என்ன சேர்? குலம் என்றால் எங்களுடைய பழக்கவழக்கங்கள் என்று எனக்குத் தெரியும் சேர்.

வாத்தியார்: குலம் என்றால், அவர்கள் குடும்பம் எத்தகைய பண்புள்ளவர்கள், நன்றாகக் கற்றவர்களா? நல்ல பகுத்தறிவு (சரி எது பிழை எது என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளக் கூடியவர்களா?) என்பதைப் பொறுத்தே (அதன்படியே) ஒருவரின் குணம் (நல்ல ஒழுக்கம்) இருக்கும் என்பது தான் இந்தப்பாடலின் அடுத்த வரிகளின் கருத்துப் பிள்ளைகளே. நன்றாக விளங்காவிட்டால் (புரியாவிட்டால்) கேளுங்கள். திரும்பவும் சொல்லித்தரலாம். எதையும் தெளிவாகப் படிக்க வேண்டும். இது வாழ்க்கையில் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பாடல்.

மாணவர்கள்: நன்றாக விளங்கிவிட்டது சேர். அடுத்த வகுப்பில் நாங்கள் முழுப்பாடலின் கருத்தையும் வாசித்துக் காட்டுவோம் சேர். இப்போ போனமுறை பாதியில் விட்ட மிச்சக் கதையைச் சொல்லுங்கோ சேர்.

வாத்தியார்: கதை கேட்கும் ஆர்வத்தில் இருக்கிறீர்கள். சரி அடுத்தமுறை எல்லோரும் முழுப்பாட்டின் கருத்தையும் எழுதிக் கொண்டு வர வேண்டும்.

மாணவர்கள்: கட்டாயமாகச் செய்வோம் சேர்.

வாத்தியார்: நல்லது. கதை விட்ட இடம் ஞாபகம் இருக்கோ?

மாணவர்கள்: ஓம் நல்ல ஞாபகம் சேர். ரவீந்திரன் குருவிடம் என்ன படித்தான் என்பதை அறிய ஆவலாக இருக்கிறோம் சேர்.

வாத்தியார்: குரு தான் மற்றவர்களுக்குக் கற்பிக்கும் விஷயங்கள் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்கும்படி சொன்னார். ரவீந்திரன் குரு சொன்னபடி கேட்காமல் வகுப்புக்கும் வராமல் எங்கோ போய்விடுகிறான். குருவுக்கு மிகவும் கவலை யாகிப் போய்விடுகிறது.

அமுதா: கோவிந்தனும் அரவிந்தனும் நன்றாகப் படித்தார்களோ சேர்?

வாத்தியார்: ஆமாம், அவர்களிருவரும் தாம் விரும்பியபடி கோவிந்தன் மருத்துவத்தையும் அரவிந்தன் பொது நிர்வாகத்தையும் நன்றாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றார்கள். ரவீந்திரனைப் பற்றிக் கவலைப்பட்டுத் தன் மனைவியிடம் கூறினார். அதற்கு அவர் மனைவி அவன் நல்ல பையனாகத் தெரிகிறது. அதனால் அவன் ஏன் அப்படிச் செய்கிறான் என்ற காரணத்தை முதல் கண்டு பிடிக்க வேண்டும் என்றார்.

கண்ணன்: அவர் காரணத்தைக் கண்டுபிடிக்க எப்படி முயற்சித்தார் சேர்?

வாத்தியார்: குரு தன் சீடனிடம் அவன் எங்கே போகிறான்? என்ன செய்கிறான்? என்று பார்த்து வரும்படி அனுப்பினார். சீடனும் ஒருநாள் ரவீந்திரனைத் தொடர்ந்து சென்று பார்த்தான். ரவீந்திரன் பக்கத்தில் உள்ள காட்டில் மாடு மேய்க்கும் சிறுவர்களுடன் கூடி விளையாடுவதைக் கண்டான். அதனைக் குருவிடம் வந்து சொன்னான்.

கிருஷ்ணா: அப்போ குரு என்ன செய்தார்? அவன் ஏன் அப்படிச் செய்கிறான் என்று கவலைப்பட்டாரோ? கோபம் கொண்டாரோ சேர்?

வாத்தியார்: குரு தன் மாணவர்களின் வாழ்க்கையில் மிக அக்கறை கொண்டவர். அன்பானவர். அவர் தானே நேரில் சென்று பார்க்க முடிவு செய்து அந்தக் காட்டிற்குச் சென்றார்.

கீதா: குருவைக்கண்ட ரவீந்திரன் பயந்து மன்னிப்புக் கேட்டானா?

வாத்தியார்: அதுதான் இல்லை. குரு காட்டிற்குள் போன போது அங்கே யாரோ இனிமையாகப் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருப்பது அவர் காதில் கேட்டது. அவர் அதை வாசிப்பது யாராக இருக்கும் என்று, அந்த வித்துவானைக் காணும் ஆவலுடன் அந்த இசை வந்த பக்கம் நோக்கிச் சென்றார்.

அமுதா: குரு புல்லாங்குழலை ரசித்தபடியே வித்துவானைத் தேடிச் சென்று கண்டு பிடித்தாரா சேர்? ரவீந்திரனைத் தேடப்போனதை மறந்து விட்டாரா?

வாத்தியார்: இனிய இசை கேட்டால் யாரும் மயங்கிப் போவார்கள் அமுதா. காட்டில் கண்ணன் குழல் ஊத மாடுகளே மயங்கி நிற்குமாம். அப்போ மனிதர்கள் மயங்குவது ஆச்சரியப்படக் கூடியதா?

அமுதா: மன்னிக்க வேண்டும் சேர். நானும் அந்தக் கதையைக் கேட்டிருக்கிறேன். மிச்சக் கதையைச் சொல்லுங்கோ சேர்.

வாத்தியார்: அந்தப் புல்லாங்குழல் வாசித்த கலைஞனைக் கண்டு பிரமித்துப்போனார். அளவற்ற சந்தோஷத்துடன் அவனுக்கு அருகே சென்றார்.

கீதா: அப்படியா? அவரிடம் முன்பு படித்த மாணவனோ?

வாத்தியார்: அது வேறு யாருமில்லை. அவர் தேடிச்சென்ற ரவீந்திரனேதான். அவன் தன்னை மறந்து புல்லாங்குழல் ஊதிக் கொண்டிருந்தான்.

மாணவர்கள்: ஓ....... அப்படியா சேர் ? நம்பவே முடியவில்லை. குரு மகிழ்ச்சியுடன் பாராட்டினாரா?

வாத்தியார்: குரு மிக மகிழ்ச்சியுடன், "ரவீந்திரன் இவ்வளவு அற்புதமாக வாசிக்க எங்கே கற்றுக் கொண்டாய்? நான் நீ வகுப்புக்கு வருவதில்லையே என்று மனவருத்தப்பட்டேன். நீ என்ன செய்கிறாய் என்று அறிந்து வர என் சீடனை அனுப்பினேன். அவன் நீ இந்தக் காட்டில் மாடு மேய்க்கும் சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டு இருப்பதாகச் சொன்னான். அதனாலே நான் உன்னைத் தேடி இங்கு வந்தேன்" என்றார்.

கண்ணன்: குருவைக் கண்டதும் ரவீந்திரன் பயந்து மன்னிப்புக் கேட்டானோ சேர்?

வாத்தியார்: ரவீந்திரன் குருவை அங்கு எதிர் பார்க்கவே இல்லை. அதனால் திடுக்கிட்டு எழுந்து நின்று பணிவுடன், "ஐயா! நீங்கள் கற்பித்த எதிலுமே என் மனத்தைச் செலுத்திப் படிக்க முடியவில்லை. அதனால் இங்கு காட்டில் மாடு மேய்க்கும் சிறுவர்களிடம் குழல் வாசிக்கக் கற்றுக் கொண்டேன். எனக்கு மனதில் தோன்றியதை வாசிக்கிறேன். என்னை மன்னியுங்கள் ஐயா" என்றான்.

ராம்: குரு நிச்சயமாக அவனை மன்னித்துப் பாராட்டி இருப்பார். இல்லையா சேர்?

வாத்தியார்: ஆமாம் குரு அவனை மகிழ்ந்து பாராட்டி, "ரவீந்திரன் இப்போ உனக்கு எதில்

நாட்டம் (விருப்பம்) என்று எனக்குத் தெரிந்து போச்சு. நீ குருகுலத்திற்கு வந்து என்னிடம் முறையாக இசையைக் கற்றுத் தேர்ச்சி பெறு" என்றார்.

அமுதா: சந்தோஷத்துடன் தலையை ஆட்டினானோ சேர்?

வாத்தியார்: ரவீந்திரன் மீண்டும் குருவை வணங்கித் தான் விரும்பியதைக் குரு கற்பிப்பதாகச் சொன்னதும் மிகச் சந்தோஷமாகக் குருகுலத்திற்குச் சென்று புல்லாங்குழலை முறையாகக் கற்றுத் தேர்ந்தான். குரு அவனது திறமையைக் கண்டு மகிழ்ந்து பாராட்டினார்.

கீதா: குருகுலத்திற்கு வந்த மூவருமே விரும்பியதைக் கற்றுத் தேர்ந்து விட்டார்களா சேர்?

வாத்தியார்: ஆமாம் ரவீந்திரன் இசையில் தேர்ச்சி பெற்றான். அரவிந்தன் அரசாங்கத்தில் உயர்ந்த பதவியில் இருக்கிறான். கோவிந்தன் நகரத்தில் மருத்துவமனை ஒன்றைக் கட்டி அங்கே மருத்துவராகப் பணி புரிகிறான்.

அமுதா: அரவிந்தன் பெரிய புல்லாங்குழல் வித்வானாக வந்திருப்பானோ சேர்?

வாத்தியார்: ஆமாம். அவன் பல ஊர்களுக்கும் போய் புல்லாங்குழல் வாசித்துப் பேரும் புகழும் பெற்றான்.

ராம்: இப்போது மூன்று பேரும் தாங்கள் விரும்பியதைக் கற்றுத் தொழில் செய்து சந்தோசமாக வாழ்கிறார்கள் இல்லையா சேர்?

அமுதா: நினைத்தபடி எல்லாம் நடப்பது அதிர்ஷ்டம் தானே. நிச்சயமாக மூன்று பேரும் சந்தோஷமாக வாழ்வார்கள்.

கண்ணன்: அவர்கள் தொழில் ஆரம்பித்தவுடன் குருவை வந்து சந்தித்து மகிழ்ச்சியுடன் நன்றி சொல்லியிருப்பார்கள் இல்லையோ சேர்?

தொடரும்.........

# ஞானிகளும் கலைஞர்களும்

ஒரு சாலைவழியே போகும்போது சப்பாத்திப் புதரைப் பார்த்தால் நாம் வெறுக்கிறோம்; ரோஜாச் செடியைக் கண்டால் மகிழ்கிறோம். ஞானிகளுக்கு ரோஜாச் செடியைப் பார்க்கும்போதும் சப்பாத்தி முள்ளைப் பார்க்கும்போதும் வெறுப்போ மகிழ்வோ உண்டாவதில்லை. கலைஞன் ரோஜாச் செடியையும் மகிழ்வோடு பார்க்கிறான்; சப்பாதியையும் மகிழ்வோடு பார்க்கிறான். இரண்டையும் சித்திரமாக எழுதுகிறான். ஆகவே ஞானியும் கலைஞனும் ஒரே நிலையில் இருந்து எதையும் பார்க்கிறார்கள். ஞானி விருப்பு, வெறுப்பு இல்லாத நிலையில் இருந்து பார்த்தால், கலைஞன் மகிழ்ச்சி என்ற நிலையில் இருந்து பார்க்கிறான்.

**நன்றி: கி வா ஜகந்நாதன், கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்**

# தொண்டு

செல்வி இ. கிருபிகா,
மிருசுவில், இலங்கை

கைம்மாறு எதனையும் எதிர்பாராது செய்யும் பணிகள் “தொண்டுகள்” எனப்படும். தொண்டுகள் செய்பவர்கள் பிறரிடம் பலனை எதிர்பார்த்துச் செய்தல் ஆகாது. நாம் பிறருக்குத் தொண்டுகள் செய்தால் இறைவன் நமக்குத் துணை புரிவார். இதற்கு எடுத்துக்காட்டாக,

“மக்களுக்குச் செய்யும் சேவையே மகேஸ்வரனுக்குச் செய்யும் சேவையாகும்”

எனும் அடியைக் குறிப்பிடலாம். சைவசமயிகளாகிய நாம் அனைவரும் தொண்டுகள் செய்தல் மேன்மையானது. தொண்டுகளை விருப்புடனும், மனநிறைவுடனும் செய்தல் வேண்டும். பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கினை நாம் அனைவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும். வாயாலும் எல்லோருக்கும் நன்மை தருகின்ற சொற்களையே கூறவேண்டும்.

ஔவையார் அருளிச் செய்த நன்னெறியில் பிறருக்குத் தொண்டுகள் செய்பவர்கள், செய்யதவர்களைப் பற்றி அழகாகக் காட்டப்பட்டுள்ளது. அதாவது,

பிறர்க்குதவி செய்யார் பெரும்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேராம் - பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பொய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

இப்பாடலடிகள் மூலம் பிறருக்கு உதவாத உலோபிகளின் செல்வம் யாவும் பிறருக்கு உதவி செய்பவர்களுடைய செல்வமாக மாறிவிடும் என்ற கருத்தினையே வெளிப்படுத்துகிறது. ஆகவே எம்மால் இயன்றளவு உதவியினைப் பிறருக்குச் செய்தல் வேண்டும்.

இதே போன்று ஆத்திசூடியிலும் “அறஞ் செய விரும்பு” என்ற அடிமூலம் நற்கருமங்களைச் செய்வதற்கு ஆசைகொள்ள வேண்டும் என்ற கருத்து விளக்கப்படுகின்றது. ஆகவே சைவ சமயிகளாகிய நாம் பிறருக்கு உதவி செய்தல், அன்பு செலுத்தல் போன்ற நற்கருமங்களைச் செய்யப் பழகுதல் வேண்டும்.

தொண்டுகளிலே பலவகை உண்டு. அதாவது ஆலயத் தொண்டுகள், சமூகத் தொண்டுகள், பாடசாலைத் தொண்டுகள் என அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

ஆலயத்திலே செய்கின்ற தொண்டுகள் ஆலயத்தொண்டுகள் எனப்படும். ஆலய நந்தவனத்தில் பூக்கள் பறித்தல், ஆலயத்தைச் சுத்தம் செய்தல், தோரணங்கள் கட்டல், பூமாலை கட்டல், விளக்கேற்றுதல், தோத்திரப்பாடல்கள் பாடுதல் என்பன நாம் ஆலயத்தில் செய்யக்கூடிய தொண்டுகளாகும்.

சமூகத் தொண்டினைப் பற்றி நோக்கும்போது, எம்மைச் சூழ்ந்துள்ள மக்கள் கூட்டமே சமூகம் எனப்படும். சமூகத்திற்குச் செய்யும் தொண்டுகளே மேன்மையானதாகக் கருதப்படுகின்றது. சமூகத்தொண்டுகள் செய்தல் மூலம் சமூகத்தால் நமக்குப் பிறரின் அன்பு கிடைக்கும். ஏழை மக்களுக்கு உதவுதல், வயோதிபர், நோயாளர்களுக்கு உதவுதல், சமூக நிகழ்ச்சிகளில் பங்கு

கொண்டு எம்மால் இயன்றளவு உதவியினை வழங்குதல், பொதுச்சொத்துகளைப் பேணுதல் எனப்பல சமூகத்தொண்டுகளைக் கூறலாம்.

பாடசாலைத் தொண்டுகள் எனக்கருதும்போது, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், பாடசாலைப் பொதுச்சொத்துக்களைப் பேணுதல், பாடசாலையை அழகாக்கல், நண்பர்களுக்கு கல்விச்செயற்பாட்டில் உதவுதல், கல்வி உபகரணங்களை இல்லாத மாணவர்களுக்குக் கொடுத்து உதவுதல் போன்றவற்றைக் கூறலாம்.

சைவசமயிகளான நமக்கு சைவசமயத் தொண்டுகள் பல உள்ளன. சைவசமய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல், சமய விழாக்களுக்கு உதவுதல், சிவனடியார்களை உபசரித்தல், பிறருக்கு உதவி செய்தல், அன்பு செலுத்தல், ஒற்றுமையாக இருத்தல், பகிர்ந்துண்ணல் போன்றவற்றைக் கூறலாம்.

எமது சைவசமயத்தில் தொண்டுகள் செய்து சிறந்த பலனை அடைந்தவர்களுக்கு எடுத்துக்காட்டாக நாயன்மார்கள் உள்ளனர். அவ்வகையில் திருநாவுக்கரசு சுவாமிகள் கையில் எப்போதும் உழவாரம் வைத்திருப்பார். அதனால் அவரை “உழவாரப்படையாளி” என்று குறிப்பிடுவதுண்டு. எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் அந்தக் கோயிலைச் சுற்றியுள்ள இடங்களைச் சுத்தம் செய்வார். உழவாரத்தால் புல்லைச் செதுக்கித் துப்புரவாக்குவார்.

“அப்பூதியடிகள்” என்ற அடியவரும் தொண்டுகளைச் செய்து முத்தியடைந்த ஒருவர். அவர் எல்லா இடங்களிலும் தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்து, களைத்து வருகின்றவர்களுக்கு தண்ணீர்த் தொண்டு செய்து அவர்களின் தாகத்தைத் தீர்த்தார்.

இதேபோன்று சைவசமய அடியார்கள், நாயன்மார்கள் தொண்டுகளைச் செய்து நமக்கு முன்மாதிரியாக இன்றும் திகழ்வதைக் காணலாம்.

இன்றும் கிராமப்புறங்களில் யாத்திரிகர்களுக்காக நீர் வசதிகள் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். அதேபோன்று பறவைகள், விலங்குகள் போன்றவைகளுக்கும் நீர்த்தொட்டிகளை அமைத்துச் சிலமக்கள் பொதுத்தொண்டினைச் செய்தவண்ணமுள்ளனர்.

ஆகவே எப்பொழுதும் நம்மால் இயன்றளவு பிறருக்கு உதவி செய்ய வேண்டும். இதன் மூலம் சிறந்த நற்பலன் நம்மை வந்துசேரும். சைவசமயிகளாகிய நாம் அனைவரிடமும் அன்பாக இருத்தல், பண்பாக உரையாடுதல், அனைவரையும் மதித்தல், ஒற்றுமையுடன் வாழ்தல், விட்டுக்கொடுத்தல், உயிர்கள் மீது கருணை காட்டல் போன்ற விழுமியத் தொண்டுகளையும் செய்தல் வேண்டும். அனைவரும் பிறருக்கு உதவி செய்து சிறந்த பலனை அடைவோமாக.

“தொண்டுகளைச் செய்வோம்
நற்பலன்களை அடைவோம்.”

## கூட்டு வழிபாடு

இறைவனை வணங்குவதற்குக் கூட்டு வழிபாடும் ஒரு சிறந்த முறையாகும். இந்திரன். சிவனை வணங்கப் பரிவாரங்களுடன் சேர்ந்தே வணங்கினான். திருஞானசம்பந்தர் கோயில் தரிசனம் செய்கின்ற போதெல்லாம் அடியவர்கள் பெருங்கூட்டமாக அவரைப் பின் தொடர்ந்து சென்றமையைத் திருத்தொண்டர் புராணத்தில் இருந்து அறியக் கிடக்கிறது

**கருத்து: திரு க செல்வரத்தினம்**



# Thirukkural Stories
# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## வெஃகாமை
## Against Covetousness

அதிகாரம்: 18 குறள்: 171
Chapter: 18 Kural: 171

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

பொருள்:
நடுவு நிலமையிலிருந்து நீங்கிப் பிறருடைய நன்மைகளை அல்லது நல்ல பொருளைக் கைக்கொள்ள விரும்பினால் அது அவனது குடியைக் கெடுத்துப் பல குற்றங்களையும் அப் பொழுதே அவனுக்குக் கொடுக்கும்.
If a man departing from equity covet the property (of others), at that very time will his family be destroyed and guilt be incurred.

பாண்டவர்களின் வளர்ச்சி திருதராஷ்டிரனுக்குப் பிடிக்கவில்லை. மகன் துரியோதனனோ பாண்டியர்களை அழித்துவிடவேண்டும் என்று தொடர்ந்து தந்தையை நச்சரித்து வந்தான். தவறான ஆலோசனைகளைச் சொல்லக்கூடியவரும் ராஜ நீதி சாஸ்திரங்களை நன்றாக அறிந்தவருமாகிய கணிகர் என்பவர் சகுனியின் மந்திரியாக இருந்தார். அவர்மூலம் இதற்கு ஒரு வழி காணலாம் என்றெண்ணிய திருதரஷ்டிரன் அவரைத் தன் அரண்மனைக்கு வரவழைத்தான். துரியோதனன், துச்சாதனன், சகுனி, கர்ணன், ஆகியோரும் அங்கே வந்து கணிகர் சொல்லப்போவதைக் கேட்க ஆயத்தமாகினார்கள்.

துரியோதனன், “கணிகரே! பாண்டவர்களைக் கண்டு நாங்கள் அச்சம் கொள்கிறோம். அவர்கள் வீர தீர பராக்கிரமம் நிறைந்தவர்கள். அவர்களுக்குத் தீங்கும், அதே சமயம் எங்களுக்கு நன்மையும் ஏற்படக்கூடிய ஒரு வழிமுறை இருப்பின் சொல்லுங்கள். அதன்படி நடக்கிறோம்” என்று கூறினான். துரியோதனனுடைய பொறாமை அங்கே ஆறாக ஓடுவதைக் கணிகர் புரிந்துகொண்டார்.

“விரோதியைச் சாம தான பேத தண்டம் என்னும் நான்கில் ஏதாவதொரு உபாயத்தால் கொன்றுவிட வேண்டும்” என்று அவர் சொன்னார்.

“கணிகரே! சாம பேத தான தண்டங்களினால் சத்துருவை எப்படிக் கொல்வது? தெளிவாகச் சொல்லுங்கள்” என்று கேட்டார் திருதராஷ்டிரன்.

“மகாராஜா! அதற்கு நரி ஒன்றின் கதை சொல்கிறேன், கேளுங்கள்” என்று கூறிய கணிகர் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

தந்திரம் மிக்க நரி ஒன்று காட்டில் வசித்து வந்தது. புலி, எலி, செந்நாய், கீரிப்பிள்ளை ஆகிய நான்கும் நரியின் நண்பர்கள். அந்தக் காட்டில், வலிமை வாய்ந்த மான் கூட்டம் ஒன்றும் வசித்து வந்தது. புலி கிழப்புலியாகி விட்டதால் மான்களைப் பிடிக்க முடியவில்லை. மானைப் புசிக்கவேண்டும் என்று ஆசைப்பட்ட நரி ஒரு திட்டம் தீட்டியது.

“புலியே! உனக்கு வயதாகிவிட்டது. உன்னால் மானைப் பிடிக்க முடியாது. நமது நண்பனாகிய எலியை மானுடைய காலில் கடித்துவிடச் சொல்கிறேன். அதன் பிறகு அந்த மான் வேகமாக ஓட முடியாது. நீ சுலபமாகக் கொன்றுவிடலாம். நாங்கள் ஐவரும் அதைப்பங்கு போட்டு உண்ணலாம்” என்று கூறிய நரியின் ஆலோசனையை மற்றவையும் ஒப்புக்கொண்டன. திட்டத்தின் படியே மான் கொல்லப்பட்டது.

“எல்லோரும் குளித்துவிட்டு வாருங்கள். அதுவரை நான் இதைக் காவல் காக்கிறேன். நானும் குளித்த பிறகு எல்லோரும் சேர்ந்து உண்ணலாம்” என்று நரி சொன்னது. முதலில் புலி குளித்துவிட்டு வந்தது. நரி புலியைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தது. “ஏன் இப்படிச் சிரிக்கிறாய்?” என்று புலி கேட்க, “எலி சொன்னதை நினைத்துக் கொண்டேன் ...சிரிப்பு வந்தது” என்றது நரி. “எலி என்ன சொன்னது?” “தான் கடித்தபடியால் தான் மானைப் பிடிக்க உன்னால் முடிந்ததாம்... தனது உதவி இல்லாமல் உனது உணவை நீ சம்பாதிக்க முடியாதாம்.”

புலிக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. “எனக்கு இந்த மான்கறி வேண்டாம் ... நானே ஒரு மானைப் பிடித்து உண்ணுகிறேன்” என்று கூறிவிட்டுக் கிளம்பிப் போய்விட்டது.

அடுத்ததாக எலி குளித்துவிட்டு வந்தது. “எலியாரே கீரிப்பிள்ளைக்கு மான் மாமிசம் விஷமாம்.... அதனால் அது உன்னைச் சாப்பிடப் போவதாகச் சொல்லிக் குளிக்கப் போயிருக்கிறது. நீ என் நண்பன் என்ற முறையில் இதை உன்னிடம் சொல்கிறேன்” என்று நரி சொன்னதும், பயம் கொண்ட எலி தனது வலைக்குப் போய்ப் பதுங்கிக் கொண்டது.

அடுத்து செந்நாய் வந்தது. “புலி உன்மீது பயங்கர கோபத்தில் உள்ளது. தனது மனைவிக்கு செந்நாய்க்கறி மிகவும் பிடிக்கும் என்பதால் திரும்பி வந்து உன்னைக் கவனித்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டுப் போனது. பார்த்துக்கொள் நண்பா!” நரி சொன்னதைக் கேட்டதும் உடம்பைச் சுருக்கிக் கொண்டு செந்நாய் ஓடிப்போய்விட்டது.

கடைசியில் வந்தது கீரிப்பிள்ளை. நரி தன் காலை மடக்கி, சண்டைக்குத் தயார் போல நின்றது. கீரிப்பிள்ளை சிரித்தது. “நான் புலி, செந்நாய் எல்லோருடனும் சண்டை போட்டு விரட்டி விட்டேன். இப்போ நீயும் வா..... யார் வெற்றி பெறுவாரோ அவர் மானைச் சாப்பிடலாம்.” இவ்வாறு நரி சொன்னவுடன் கீரிப்பிள்ளையும் பயந்து போய், “ஐயையோ! புலியை, செந்நாயை விரட்டி விட்டாயே. நீதான் வீரன். எனக்கு இந்த மான் வேண்டாம்” என்று சொல்லி ஓடிப்போய்விட்டது. நரி கடைசியில் தன் இஷ்டம் போல மானைத் தின்றது.

கணிகர் சொல்லி முடிக்க, திருதராஷ்டிரன் கதையைப் புரிந்து கொண்டான்,. துரியோதனன் குதூகலமடைந்தான். கர்ணனும் துச்சாதனனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சகுனியோ, இனி என்ன செய்தால் பாண்டவர்களை அழிக்கலாம் என்று வழமை போலவே கணக்குப் போடத் தொடங்கினான்.

Thiritharashdiran could not accept and tolerate the growth of Pandavas in all aspects. In addition, Duriyothanan had always been telling his father to get rid of Pandavas.

Kanikar is a person who knows diplomatic strategies that are necessary for a Kingdom and also can suggest bad ideas to others. He is also the minister of Saguni – Duriyothanan's uncle.

Thinking that Kanikar would suggest a preferable idea on this matter, Thiritharashdiran invited him to his palace. Duriyothanan, Thuchathanan, Saguni and Karnan were also there, waiting to hear what Kanikar was about to say.

'Hon. Kanikar! we are scared of Pandavas. Their bravery, courage and valour are great. Please suggest a way so that they get harmed but at the same time it should benefit us. We will follow your advice' said Duriyothanan.

Kanikar, realising that Duriyothanan's envy was flowing like a stream, said this.
'Of the four ways, Sama, Thana, Petha, Thandam you have to choose and follow one of these paths to win your enemies'

'Dear Kanikar, please tell us clearly, how we can achieve our goal by following one of these Sama, Thana, Petha, Thandams?' asked Thiritharashdiran.

'Lord! I will tell you a story about a fox. After listening to that your doubts will be cleared ' said Kanikar and started to narrate the story.

There, in a forest, was a fox, which was very cunning and capable of getting whatever it wanted. A tiger, a rat, a mongoose and a coyote (a king of god) were also there and had been the friends of the fox.

There was a herd of deer in that forest and they were very strong. The tiger was old and couldn't catch any deer. The fox wanted to taste the meat of deer, hence, it planned to do something so that a deer can be killed. 'My dear tiger! You have become old and unable to catch any deer. I would ask one of our friends - the rat, to bite the leg of a deer so that the deer could not run fast. This can make it easy for you to kill the deer and then the five of us can share it and eat' the fox suggested. All the four agreed to this plan and managed to catch a deer and killed it.

'All of you go and take a bath and we can eat together' said the fox. 'Until you all come back, I will guard the deer. Then I will have my bath before we eat.'

The tiger came first after the bath. Fox laughed sarcastically at the tiger and the tiger asked, 'Why do you laugh like that?'
Fox: 'I remembered what the rat told and it made me laugh'
Tiger: 'What did the rat tell?'
Fox: ' Only because of its help, you caught the deer, otherwise you wouldn't have caught the deer'

Tiger got very angry, 'I do not want to eat this meat. I can catch a deer myself and eat it' saying this, the tiger went away.

Next came the rat. 'My dear rat, the mongoose said that the deer meat is poisonous for him and he wants to eat you after his bath', fox told the rat. Rat become scared and nervous and went inside it's burrow.

Then came the Coyote.The fox told; 'The tiger was extremely angry with you. He told that his wife loves Coyote meat and he would be coming back with his wife…..take care my dear'. The Coyote shrank itself and ran away from the place.

And lastly, the mongoose arrived. Fox acted, bending its leg, as it was ready to fight with the mongoose, and said, 'Just now I fought with others and chased all of them away, now you come and fight with me. Whoever wins will eat the deer.'

'Oh no! you are the bravest and have won others. I don't want this deer', the mongoose ran away as fast as it could.

As it wished, the fox enjoyed the meat of deer all by himself.

Kanikar finished telling the story. Thirutharastiran understood what the story suggested. Duriyothanan was extremely happy.Karnan and Thuchchthanan looked at each other. Saguni started his calculations as usual in order to find a way to destroy the Pandavas.

# அர்ச்சனை செய்வதற்கு!

எல்லோரும் அர்ச்சனை செய்யலாம்; செய்ய விடவேண்டும் என்று குரல்கள் ஒலிக்கின்றன. சிவாசாரியாரின் குடும்பத்தில் பிறப்பது மட்டும் அர்ச்சகராகலாம் என்ற தகுதியை ஒருவருக்குக் கொடுத்துவிடாது.

மருத்துவரின் மகன் மருத்துவப் பயிற்சி பெறாமல் மருத்துவராக இயலாது. நாம் பயிற்சி அற்ற மருத்துவரிடம் சிகிச்சைக்குப் போகத் தயங்குவோம். ஒரு சாரதியின் மகன் வாகனம் செலுத்தும் பயிற்சி பெறாமல் வாகனம் செலுத்த இயலாது. பயிற்சி பெறாத ஒருவர் செலுத்தும் வாகனத்தில் நாம் மறந்தும் பயணிக்கமாட்டோம்.


அதுபோல நால்வகைத் தீட்சை பெற்றவர்களே அர்ச்சகராகலாம் என்று சொல்லப்படுகின்றது. சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசார்ய தீட்சை என்பவை அந்த நான்கு தீட்சைகள்.

தெரிந்துணரின் முப்போதும் செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிஅர்ச் சனைகள்சிவ வேதியர்க்கே யுரியனஅப்
பெருந்தகையார் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ!

- சேக்கிழார், திருத்தொண்டர் புராணம்

# விநாயகர் திருவுருவத்தின் தத்துவம்

விநாயகர் ரூபம் :



இறை வடிவங்கள் என்றாலே, ஒவ்வொரு வடிவங்களுக்கும் அவை வைத்துள்ள ஆயுதங்களுக்கும் கருவிகளுக்கும் ஒவ்வொரு தத்துவம் உண்டு. விநாயகர் யானை முகமும், மூன்று கண்களும், முறம் போன்ற இரண்டு செவிகளும் நான்கு திருக் கரங்களோடு ஐந்தாவது ஒரு திருக்கரமாக தும்பிக்கையுடனும் இருக்கிறார். அக் கரங்களில், மேல் வலக்கரத்தில் அங்குசம் எனும் யானையை அடக்கும் கருவியும், மேல் இடக் கரத்தில் பாசம் என்னும் பந்த பாசங்களால் உயிர்களைக் கட்டும் கயிறும், கீழ் வலக் கரத்தில் ஒடித்த தந்தமும், கீழ் இடக் கரத்தில் மோதகம் என்னும் பூரணம் வைத்த கொழுக்கட்டையும் கொண்டு பெரிய வயிறு உடையவராக அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்திருப்பார். இதுவே விநாயகரின் திருமேனி அமைப்பாகும்.

யானை முக தத்துவம் :
விநாயகப் பெருமானின் முகவடிவு, அ, உ, ம் என்ற மூன்றும் இணைந்த ஓம் எனும் “ஓங்காரக் குறியீடாகும்”. இதுதான் இந்து மதத்தின் மூலம்.

மூன்று கண்கள்:
விநாயகரின் மூன்று கண்களில் வலக்கண் சூரியன். இடக்கண் சந்திரன். நெற்றிக்கண் அக்னி எனும் மூவகை வடிவங்களாகும். கணபதியின் முக்கண்கள் சிவாம்சமாகும்.

முறம் போன்ற இரண்டு செவிகள்:
யானைக் காதுகள் எவ்வளவு தீனக் குரலையும் கேட்க வல்லன. முணுமுணுத்தால் போதும். மனம் இளகி விடுவார். முறம் போன்ற காதுகள் நாம் கேட்பவற்றை நன்றாகச் சலித்துப் புடைத்து, நமக்கு நல்லது எதுவோ, அதைப் பிரித்து எடுத்துக் கொடுக்கும்.

ஐந்து திருக் கரங்கள் :
“ஐந்து கரத்தனை யானை முகத்தனை” என்னும் திருமந்திர வாக்கால் விநாயகர் ஐங்கரன் என்பதை அறியலாம். இந்த ஐந்து திருக்கரங்கள் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்கிரஹம் என்னும் படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் என்பவற்றைக் குறிப்பிடுகின்றன. இச் செயல்கள் ஆற்றும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன், சதாசிவன் எனும் ஐவருக்கும் அவர்கள் தம் செயல்களைச் சரிவரச் செய்வதற்கு மூல காரணனாக விளங்குகிறார் விநாயகர் என்பதையே அவரது ஐந்து திருக்கரங்கள் நமக்கு உணர்த்துகின்றன. கரம் என்றால் காரியங்கள் செய்வதற்குரிய கருவி என்று பொருள்.

ஒடித்த தந்தம் :
கஜமுகாசுரனை அழிப்பதற்காக ஒடித்த தந்தம் இது. இதனால் தான் வியாசர் சொல்லச் சொல்ல மகா பாரதத்தை மேரு மலையில் எழுதினார் விநாயகர். அசுரர்களை அழிக்கும்போது இது ஆயுதமாகிறது. அப்போது ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதம் எனும் ஐந்து (மலங்களை) அழுக்குகளை இது நீக்குகிறது. எழுதும் போதோ, அதே தந்தம் எழுதுகோல் கருவியாகி விடுகிறது. எழுத்து, கல்வி ஞானத்தின் குறியீடாகும். எனவே இது மெய்ஞ்ஞானத்தை நமக்கு அருளுகிறது. அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை அருளுவதே அவருடைய ஒடித்த தந்தம்.

மோதகம் எனும் பூரணம் வைத்த கொழுக்கட்டை :
உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் ஏதாவது ஒரு வகையில் குறை உடையனவாகத் தான் இருக்கும். ஆனால், இறைவனிடம் இருக்கும் சக்தி மட்டும் பரிபூரணமாக விளங்குவதாகும். அப்படிப்பட்ட பரிபூரணமான இறைவனை நாம் உணர முடியாதபடி அச் சக்தி பிரபஞ்சப் பொருள்களால் மறைக்கப்பட்டு உள்ளது. இதையே பூரணம் வைத்த கொழுக்கட்டை நமக்கு உணர்த்துகிறது. இறைவனை அடைந்தால் நமக்குச் சிற்றின்பங்கள் நீங்கி பேரின்பம் விளைகிறது. இதனையே பூரணத்தின் இனிப்புச் சுவை நமக்கு அறிவுறுத்துகின்றது.

அங்குசம் :
சிறிய கருவியான இது, பெரிய யானையையே கட்டுப்படுத்துகிறது. அது போலவே நம்மை மதம் கொண்ட யானையாக மாற்றும் நம் ஐம்புலன்களை கட்டுப்படுத்த இறைவன் உதவுகிறான் என்பதை இந்த அங்குசம் உணர்த்துகிறது,

பாசம் :
ஜீவான்மாக்களாக விளங்கும் மனிதர்களாகிய நாம்தான், பசு என்று ஞானியார்களால் குறிப்பிடப்படுகிறோம். பசு என்றால் ”பாசத்தால் கட்டப்பட்டது” என்று பொருள். பாசம் என்ற சொல், கட்டப் பயன்படும் கயிற்றினைக் குறிக்கும் சொல்லாகும். சர்வ வல்லமை இருந்தும் கயிற்றினால் கட்டப்பட்ட பசு எங்கும் செல்ல முடியாமல் தவிப்பது போல ஆன்மாக்களாகிய நாம் இவ்வுலகில் உள்ள பந்த பாசங்கள் என்னும் கயிற்றினால் கட்டப்பட்டு சுதந்திரமாக இறைவனிடம் சென்று சேர முடியாதபடி தவிக்கிறோம்.

தும்பிக்கை எனும் துதிக்கை :
விநாயகப் பெருமானின் ஐந்தாவது திருக்கரமாக விளங்கும் துதிக்கை அவருடைய தெய்வ பலத்தையும், இடம்புரி விநாயகராக விளங்கும்போது “உ” கரத்தையும், வலம்புரியாக அருளும்போது ஓங்காரத்தையும் குறிப்பிடுகின்றது. ஓங்கார முகத்தவன் அல்லவா கணபதி? தும்பிக்கை என்றால் உன் துணையுள்ள கை என்று பொருள்.

பெருவயிறு (தொந்தி) :
இது ”ம” கரத்தின் குறியீடாகும். இது இந்த உலகத்தையும் அதில் உள்ள அசையும், அசையாச் சொத்துக்களையும் அங்கிருந்து அவற்றை அநுபவிக்கும் மனிதன் உள்ளிட்ட பல்வகை உயிரினங்களையும் குறிப்பிடுவதாகும்.

கணபதியின் வாகனம் :
கணபதியின் வாகனம் எலி என்றும், மூஞ்சூறு என்றும், பெருச்சாளி என்றும் பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள். ஆகுவாகனன், ஆகுரதன், ஆகுபதி, ஆகுகன் என்பது கணபதியின் ஏனைய திருநாமங்களாகும். இதில் வரும் ஆகு என்ற பதம் பெருச்சாளி என்பதைக் குறிக்கிறது. மூஷிகம் என்றாலும் பெருச்சாளிதான். அவ்வளவு பெரிய யானை வடிவினை ஒரு சிறு பெருச்சாளி தூக்க முடியுமா? பெரிதாக ஆளக்கூடிய பெருந் தலைவன் விநாயகன் என்பதையே பெருச்சாளி வாகனம் நமக்கு அறிவுறுத்துகிறது.

ஆதாரம்:

1. சங்கடங்கள் தீர்க்கும் சங்கடஹர சதுர்த்தி
2. தெய்வங்களின் வடிவங்கள்

தொகுப்பு: திருமதி தவமணிதேவி கணேசலிங்கம்
மூதாளர் அன்பு இல்லம்
சிவபுரவளாகம்
இலங்கை

**ctd from page 11**

**The Failure of Religions**

The failure of religions may be attributed to three causes :
(a) faulty doctrine as to origin
(b) structural defects
(c) wrong methods of initiation.

Several religions have grown out of the childish speculations of primitive peoples, their unsound inferences and their natural yearning for the discovery of some superior being who can help and protect them in their troubles and sorrows. The human mind seeks the cause of every unusual phenomenon that comes under its observation. In the absence of sufficient knowledge, supernatural powers were in the early days attributed to natural phenomena. Thunder and hghtning, rain and storm, were regarded as superior powers on account of their mightiness, and became the gods of some people. The sun and moon, Jupiter and Venus, were regarded as ods on account of their light giving power. Snakes and crocodiles, small-pox and cholera were invested with divinity because they were frightful and and were believed to spare the people only if they were worshipped. Certaintrees and rocks associated with some arresting incident came to be rgarded as the abodes of divine beings. Ancestor worship and hero worship grew out of reverence and esteem. Religions of this type are not worth considering. The origins of religions like Savism and Judaism is shrouded in mystery and it is impossible now to failure of these religions back to their source. The younger religions seem to owe their origin to certain men who received higher knowledge. Buddha, Jesus and Muhammad are supposed to have received such nowledge. But it may be assumed that they could not have communicated to their disciples all the knowledge they had received. For certain forms of knowledge based on direct experience are not communicable, such as the taste of sugar, the sweetness of divine contemplation, and the capacity to see God in all things. Even of those that could have been communicated, their disciples could have received only what was within the capacity of their intellect to understand or their nature to appreciate. Knowledge useful only to a few cannot be good enough for a large number, and may not therefore serve the purpose of a national or a universal religion. Even if all the knowledge gained had been transmitted, it would not by itself have been enough for the needs of the religion. Religion is not a matter of mere knowledge. It relates to life as a whole and must be able to influence every department of life. In order to achieve this, it ought to provide a comprehensive scheme and definite means of leading a good life. In the absence of knowledge that may be said to be completely adequate to the demads of practical life, no religion can be satisfactory or rally successful.

The second cause of failure is the defect in the structure of religions. Every religion must have a more or less philosophical basis. It must give an answer to questions such as the following:

- Is the world real or unreal?
- Is a man the mere body or something higher than that?
- Is there a purpose in his life, has he a goal to reach, or is life left to chance?
- If there is a goal, what is it?
- Is man the sole factor in the attainment of the goal or is he guided and controlled by a superior being?

Answers to these and similar questions will form the foundation of a religion and may be called its philosophy. If the religion holds out a goal, it must give an account of the path to the goal and the means of reaching it.

The elements of a religion are thus fourfold, and if they are fully worked out and co-ordinated, its structure may be said to be

satisfactory. But few religions possess such a scientific structure. One religion may have an unsatisfactory theory but a lofty goal. Another may present a clear-cut path but prescribe inadequate means. Such religions are not workable and fail to be of use to their followers.

The third cause of the failure of religions is the wrong method of initiation. The general rule is that children automatically become followers of the religion to which their parents belonged. Here the question of suitability or of utility never enters. A saintly father may have a vicious son who follows his father's religion. If it suits one, it cannot suit the other. A religion which demands great self sacrifice cannot be followed by one whose intellectual equipment is poor and power of self-control weak. It cannot be said that the father and son were bom with the same degree of intelligence and the same amount of self-control. The inequality of men even at birth cannot be questioned. Therefore, the religion of the father adopted by the son must end in failure.

Besides, each stage of civilization demands an appropriate development in the religions of the people. A religion which rules by threats and punishments cannot remain long in a country where knowledge and freedom have their sway. Then the religion becomes as useless to parents as to their children and proves to be practically lifeless.

The second method of adoption is that of being converted to a religion. Few people, however, are converted to a new religion by conviction. Before a man gives up his first religion on the ground that he is convinced of his errors, he must have had a thorough and accurate knowledge of it. But even the humblest religion has a field of knowledge, too wide for the average man to master. Besides, he requires extensive knowledge of the physical, mental, moral, and social sciences to get a correct understanding of his own religion. Having mastered his own religion he must master the new religion and then compare the two religions to decide whether he can give up the old religion and accept the new one instead. Such extensive knowledge of the two religions and of the sciences can be acquired by very few persons. Therefore, conversion by conviction, which is the only right course, is next to impossible.

Conversion can therefore be made mainly by wrong methods such as trading on ignorance, appealing to human weakness, and the offer of temporal advantages. Men converted in this way cannot be said to have accepted the new religion on the ground of acceptability or of the spiritual value in it.

The Value of Religions

There are religions in an undeveloped state like Lokayata (sensualism) which have been serving the evil propensities of their followers by upholding loose morals. But the religions of the more advanced peoples have, as a rule, been able to do good. They present the ideal of an all-loving God or of men on the threshold of godliness. The contemplation of these ideals is open to most of the followers of a religion and tends to counteract evil tendencies and to strengthen the good. The practices enjoined by such religions also serve to exalt the mind, and their rules of conduct give knowledge of right and wrong. But we know there is a vast gulf between mere knowing and realising, and between realising and doing. Knowledge is only an awareness of facts. means possessing no fixed value of its own Complete realisation of truth and action are ends, and if these are not attained little progress is made. (The realization of a truth compels action. Mere knowledge does not. Several people know that all men are essentially divine, but do not translate the knowledge into action in their dealings with others. But those who have realised the truth, act up to it.)

### HISTORICAL 8TH CENTURY

# KUMBALAWELA, CHANDRASEKERA PILLAIYAR TEMPLE, ALAVEDDY

By Sellappah Selvapaskaran

The impressive Kumbalawela Chandrasekera Pillaiyar Temple stood majestically in the centre of the seven Pillaiyar temples built by the Pandya Princess of Mathurai, Marutha puraveeka Valli. The Princess was the daughter of Tissa Ugra Pandyaan, King of Madurai in the 8th century. Chandrasekera Pillaiyar is famous for all four aspects of Sthalam (the place of Divinity), Moorthy (The Presiding Deity), Theertham (The Holy Water), and Virudcham (the Holy Tree). The Sanctity of SIsthalam " Kumbalawela" is a Pali language common to the Hindus and Buddhists as an auspicious religion etc. and it is a coincidence that Kumbalawela town in upcountry Bandarawela where the town has a Theravada Buddhist Mahamevanava Monastery that is, famous attraction for meditation and Spiritual growth.

MEDICAL SCIENCE VS THE DIVINE WILL

The medical treatment for the facial deformity and intestinal disorder of Pandya Princess of Madurai, Maruthapuraveeka Valli was seeking treatment for her facial deformity and intestinal disorder. She heard about the Keerimalai spring with curative powers, that cured the facial deformity of Nagulamuni, whose face resembled that of a mongoose, was cured by bathing in the Keerimalai Springs. It is also intertwined with his continued devotion to and prayers to Lord Naguleswararm. Lord Naguleswarar willed that Nagulamuini's facial disorder deformity be restored to the originala human face. Despite all the medical treatments to Maruthapuraveeka Valli underwent for the facial deformity, She was not cured. She decided to travel all the way to Keerimalai Springs which have natural curative powers, to bathe in the waters. She met the Nagulamuni and, with his guidance, she took a bath and worshipped Naguleswarar to cure her facial deformity and intestinal disorders. Nagulamumi looked at her face he said to her that her facial disability, which appeared like the face of a horse, has been restored to that of a human face. As a tribute to the divine power, she built the Kanthaswamy temple in the hamlet of Koilkadavai. As a result of her facial deformity being cured, the name of the hamlet has been changed to Maviddapuram.

THE NEXT STEP PANDYA PRINCESS

The next step Pandya Princess Maruthapuraveeka -Valli accomplished was settling those Royal "parivaram" (means who accompanied her in the her entourage). She selected the a location in close proximity to Maviddapuram Kanthaswamy Temple, in order for them to engage in active roles associated with the temple. She settled the Pandya Royal Palace staff in the vicinity of Maviddapuram Arulmigu Mutthumari Aamman Thevasthanam, along the Arasadi Junction on the Jaffna- Kankesanthuai Road leading to Kollankaladdy Vanniasingam Theru Madathady Junction.

It was believed that Princess Maruthapuraveeka Valli's facial deformity was a facial disorder (mandibulo dysostosis). In addition to this, she was suffering from a persistent intestinal

disorder. After the construction of the Kanthaswamyi temple, the public and the Parivaram who accompanied the Princess declared that the Princess's face has appeared to be transformed to that of a human. However, the Princess was not convinced that her face had restored to the appearance of the human face. She rushed to Keerimalai to obtain the advice of sage Nagulamuni and placed before him her grievances. Nagulamuni consoled the Princess and said, "You failed to invoke the prime deity Vigneswaran / Pillaiyar at the commencement of your function and seek the divine grace of Pillaiyar. This is absolutely necessary to protect his devotees from all the obstacles (Vignams)". And as such, he advised as a penance to construct Pillaiyar/Vigneswaran temples and said that the Princess would be conferred with all forms of auspicious things. After completion of the construction of the third Pillaiyar temple called “Alahollai Pillaiyar” temple in the hamlet of Alaveddy and leading her Parivarams / Royal contingent and entering to the corner of the Alaveddy Kumbalawela Maviduthidi site, Princess Maruthapuraveeka Valli saw that her face had a miraculous change.In the eyes of Maruthapuraveeka Valli her facial disorder, the appearance of that of a horse disappeared and had been restored to a human face. This was an auspicious ending to her condition.

As a result of this miracle, Pandyaa Princess entered the sacred Sthalam Kumbalawelai Corner from that day the miraculous site is called “MA” which means horse, VIDU means left, “THIDDY” which means a small earth mound. This is spelt in the Tamil language as “Mavidu Thiddy”. She herself in her mirror noticed that her horse face appearance (cranio facial abnormalities) Vanished and that site is historically known as “Maviduthiddi”. She relished as the Pandya Princess as her prayers were answered and she bathed in. The Theertham which she bathed in is called Kumari Theertham, named in the 8th century. with The Moorthyharam of Kumbalawela Pillaiyar. Lord Pillaiyar’s divine glory spread like wildfire in all directions.

Strict adherence of vedha agama shastras and the real concern of the devotees of Somasumdera Kurukkal and his descendants enriched the devotees' upliftment of Kumbalavella thevasthanum!!!.

The Adi pioneer Kurukkal was Aagama Shastra Shironmani - highly revered - Srila Sri Somasunthara Kurukkal, Suppiah Kurukkal up to Rasa Kurukkal. The descendants of Somasundara Kurukkal followed by his son in law Suppiah Kurukkal and Somaiya Kurukkal and their children, Kanapatheeswaran Kurukkal ( Kanapathy Iyer), Vairavanatha Kurukkal ( latter Chief Priest of Nallur Kandasamy Temple), Venkateswara Kurukkal (Murugaia Iyer), Ramalinga Kurukkal, Shanmugathasa Kurukkal, Nagarasa Kurukkal, (Rasa Iyer), and their grandsons too did not loose their piety and Saiva Aagama Shastra calibre and dedication. to the historic Pillaiyar temple constructed by Princess Maruthapuraveera-Valli., Strict adherence of Vedha Aagama Shastras and the real concern of the devotees of Somasunthara Kurrukal and his descendants enriched the devotees' upliftment of Kumbalawala Thevasthaanam!

2nd Historical Event


When "Sri Lanka Maha Siddhar” Siva Yogar Swamigal Ordained his disciple British. Lord James Ramsbotham Soulbury, In 1949, the second recorded historical event happened.

Yogar Swamigkal declared him as Gurudeva and named him “Subramania Swamy”. He willed Gurudeva to construct the Subramania Ashram in Alaveddy with his 70 American disciples, including Satguru Bodhinatha Veylan Swamy, Guru Mahasannidhanam, Kauai Aadheenam Hawaii, USA.!!!. It was the greatest gift to Alaveddy as the Subramania Swamy in his Ashram conducted Bhajans and Saiva Sitanta classes, as well as music and dance classes for children.

Subramania Swamy and his 70 devotees' usual routine is early in the morning attending "Uthaya poojah" in Kumbalawela Pillaiyar Temple, singing Bhajan songs, Thevaram and, Thirumurai. They also presented the days’ thought and a short divine discourse on spiritual upliftment and the inner significance of meditation practice. which is one of the ideal ways to be near to the divine Lord and All of them sing Sage Yogar Sswamigal's sacred meditation hymn:-

Hara- Hara! Siva, Siva, who in thy lover's heart does dwell,
Who are is the essence of Vedas!
O wealth, O jewel!
O beauteous King, our ruler, whom the poets praise
Who are commingled with the eyes that see and doesse
Like the sunlight that pervades!

The above is a sacred meditation hymn by Sage Yogar Swamigal on Lord Siva's cosmic dance form at "Chidambaram" in Tamil Nadu state, India. The hymn is in Tamil language and also transliterated in English for easy singing of Bhajans for his American disciples. At the end of the bhajans Subramanian Swamigal and disciples will proceed to the Columbuthuarai ashram of their Guru Yogar Swamigal and get charged from his Darshan and sacred discourse.



# RUBY'S
CATERING

**020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு



**திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா**

**கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்**

**அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா**



**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton

THISTLE HOTELS
more than just accommodating

Holiday Inn

*உட்பட பிரபல ஹோறல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.
OPENING HOURS : MON - SAT (10.30 AM - 6.30 PM). SUNDAY (11.30 AM - 6.30 PM)